For private circulation only

Book Post

https://christianhistoricalsociety.in/

# கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

அக்டோபர் 2023

திசை தெரியாமல் திகைக்காதிருக்க திருச்சபை வரலாறு தெரியவேண்டும்

விலை : ரூ 60 • இதழ் 41










+91 9176780001

https://christianhistoricalsociety.in/

# ஆசிரியர் ...

சுஜித் ரெக்ஸ்
வடிவமைப்பு

மன்னா செல்வகுமார்
ஆசிரியர்

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் வாழ்த்துக்கள்

அண்மைக் காலத்தில் தமிழ் கிறிஸ்தவர்களுக்கு தங்கள் வரலாற்றைக் குறித்தும், தாங்கள் எப்போது, எப்படி கிறிஸ்தவர்களாக மாறினார்கள் என்பது பற்றியும் அறிய ஆவல் ஏற்பட்டுள்ளது.

“யார் நமது காரியமாய் போவான், இதோ அடியேன் இருக்கின்றேன். என்னை அனுப்பும்” என்று ஏசாயா தீர்க்கன் முன் வந்தது போல தமிழ் கிறிஸ்தவ வரலாற்றை மீள் பதிப்பு செய்யவும், வரலாற்று பணிகளை கள ஆய்வுப் மேற்கொள்ளவும், கடவுளால் தெரிந்துகொள்ளப்பட்ட இயக்கமே ‘கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்’

தமிழ் திருச்சபைக்கு அருமை இரட்சகர் தந்துள்ள ஏராளமான ஆசீர்வாதங்களில் சிறந்தவற்றை தொகுத்து இங்கே கொண்டுவந்துள்ளோம். மணலுக்குள் புதைந்து கிடக்கும் மாணிக்கக் கற்களைப் பொறுக்கி எடுத்து அணிகலமாகச் செய்தாற்போல், ஆங்காங்கு சிதறியும், மறைந்தும் கிடந்த சரித்திரங்களைக் கண்டெடுத்து, சிறந்ததொரு தொகுப்பாக கொண்டு வந்துள்ளோம்.

எனவே உறுப்பினர்கள், வாசகர்கள் இம்மாத ஆய்விதழை நண்பர்கள், உறவினர்களுக்கு அறிமுகப்படுத்த அன்போடு கூட கேட்டுக் கொள்ளுகின்றேன். ஒவ்வொரு மாதமும் இவ்விதழை பிரிண்ட் செய்து வெளியிடுவதற்கு மிகுந்த பொருட்செலவுகள் உண்டு, மாத சந்தாவை புதுப்பித்துக் கொள்ளும்படி அன்புடன் நினைவுபடுத்துகிறேன். முடியுமானால் காணிக்கையாகவோ அல்லது நன்கொடையாகவோ கொடுத்து தாங்க அன்போடு கூட கேட்டுக் கொள்ளுகின்றேன்.

பராபரனின் பணியில்
*Manna Selvakumar*




**ஆசிரியர்**

**கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,**
**கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,**
**பங்களாச் சுரண்டை-627859,**
**தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)**
**04633 290401, 91767 80001**


christianhistoricalsociety.in
**tchsportal.co.in**

சந்தா விபரங்கள் இதழின் உள்ளே,
இது ஒரு வரலாற்றுச் சங்க
உறுப்பினர்களுக்கான பதிப்பு

G Pay



மதுரை

# வடக்கு வாசல் உவெப் நினைவாலயம்


Dr. சாமுவேல் தங்கபாண்டியன்
Mr. பென்னிராஜ்

உவெப் நினைவாலயம் என்பது மதுரை மாநகரின் வரலாற்றுச் சிறப்புமிக்க பழமையான கிறிஸ்தவ சி.எஸ்.ஐ. ஆலயங்களில் மூன்றாவது இடத்தைப் பெறுகின்ற ஆலயமாகும். முதலில் மதுரையில் தோன்றியது கீழவாசல் ஆலயம், அடுத்ததாக மேலவாசல் ஆலயம். மூன்றாவதாக தோன்றியதுதான் வடக்குவாசல் உவெப் நினைவாலயம் என்று வரலாறு கூறுகிறது. ஆகவே அந்த உவெப் நினைவாலயம் பற்றிய ஆரம்ப வளர்ச்சி குறித்து பதிவு செய்வதில் பெருமையடைகிறேன்.

மதுரை மாநகர், கூடல் மாநகரம் என்றும், கோவில்கள் நகரம் என்றும் அழைக்கப்பட்ட, சிறப்புற நன்கு வடிவமைக்கப்பட்ட நகரமாகும். பழமையான மதுரை நகர் கோட்டைக்கு நான்கு வாசல்கள் இருந்தன. இறை ஊழியம் செய்திட வந்த வெளிநாட்டினர் கோட்டைக்கு அப்பால் முதலில் ஆரம்பப் பள்ளிகளைத் தொடங்கினர். அவைகளையே அன்றைய நாட்களில் ஆலயங்களாகவும் உபயோகப்படுத்தினர்.

ஒவ்வொரு வாசலுக்கும் ஒரு ஆலயமாக கீழவாசல், மேலவாசல், வடக்கு வாசல், தெற்கு வாசல் என்ற பெயர்களுடன் வழிபாடுகள் நடத்தப்பட்டன. அமெரிக்க நாட்டிலிருந்து தமிழகத்திற்கு உயர் இறைப்பணியாளர்கள் 1810 ல் வந்து திருமங்கலம். பசுமலை. மதுரை என்று இடங்களைத் தெரிவு செய்து இறைப்பணியைத் தொடங்கினார்கள். மதுரையைச் சுற்றிலும் ஆரம்பப் பள்ளிகளைத் தொடங்கினார்கள். அவற்றில் ஒன்றுதான் 1835ல் தொடங்கப்பட்ட கேப்ரன் ஆரம்பப் பள்ளி. பெரும்பாலும் இதன் ஆசிரியர்கள் அமெரிக்க பெண் ஊழியர்கள் தான். கேப்ரன் பள்ளியில் ஆராதனை நடந்தாலும், வசதி இல்லாத மக்களும் தங்களோடு இணைந்து கலந்து கொள்ள வேண்டும் என்று சிம்மக்கல் என்ற இடத்தில் தெற்கே பார்த்த வாசலைக் கொண்ட ஒரு சிறிய ஆலயத்தை எழுப்பினார்கள். அன்றைய கட்டுமானச் செலவு ரூ. 1200/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த சிற்றாலயத்தின் முதல் ஆயர் சவரியப்பன் சைமன் என்பவர், 1891 முதல் 1901 வரை ஆயராக பணியாற்றினார். இவர் பல கீர்த்தனைப் பாடல்கள் இயற்றியவர். இவருடைய பாடல், **'என்னை ஜீவபலியாய் ஒப்புவிப்பேன்'** இன்றும் ஆலயங்களில் பாடப்படும் சிறப்பான அர்த்தமுள்ள கீர்த்தனைப் பாடலாகும்.




சிம்மக்கல் ஆலயத்திற்கு மக்கள் வரவு அதிகரித்தபடியினாலும், அருகிலிருந்த கத்தோலிக்க சபை மக்களிடையே தோன்றிய சில சுற்றுச் சூழ்நிலை சரி இல்லாத காரணங்களுக்காகவும், வேறுபாடுகள் அதிகரித்த காரணத்தினாலும், கேப்ரன் ஹால் பள்ளி அருகிலேயே ஆலயம் எழுப்பிட இடம் பார்க்கப்பட்டது.

1918ஆம் ஆண்டு கேப்ரன் ஹால் பள்ளி எதிரிலேயே இன்று ஆலயம் அமைந்துள்ள இடம் வாங்கப்பட்டது. ஆலயம் கட்டத் தேவையான பணம் வேண்டுமல்லவா? கேப்ரன் ஹால் பள்ளி ஆசிரியர்களும், மாணவியரும் கலை நிகழ்ச்சி நடத்தி பணம் திரட்ட எண்ணினார்கள். ஆனால் அன்றைய சமய. சமுதாய, நம்பிக்கை, பெண்கள் கலை நிகழ்ச்சி நடத்திட அனுமதி அளிக்கவில்லை.

**யார் இந்த உவெப்**

1819ல் டிசம்பர் 15ம் நாள் இங்கிலாந்தில் பிறந்த இவர், ஆஸ்திரேலியாவில் அமெரிக்காவில் பொதுக்கல்வி. குருத்துவக் கல்வி பெற்று 1845ல் அருட்பொழிவு பெற்று செப்டம்பர் 30ல் செல்வி நான்சி என்பவரை மணந்தார். இசைத்தமிழில் ஆர்வம் கொண்டு தஞ்சை வேதநாயகம் சாஸ்திரியாரிடம் தமிழைக்



கற்றார். தமிழில் கவிபாடும் எரிக் புலமை பெற்ற இவர் அருட்திரு. ஜேம்ஸ் அருட்திரு. ஜே.ரெண்டல் ஆகியோருடன் 1846 ஏப்ரல் 29ல் தமிழ் வளர்த்த மதுரையில் தடம் பதித்தார். 1853ல் சாஸ்திரியாரின் கீர்த்தனைத் தொகுப்பில்.

**'பாவியாகவே வாறேன்; பாவம் போக்கும் பலியாம் என் யேசுவே வாறேன்'**

கீர்த்தனை 184 என்ற பாடலை எழுதி வெளியிட்டார்.

1851, 1857ம் ஆண்டுகளில் திருமறையை தமிழில் மறுபதிப்பு செய்யும் குழுவில் இருந்த இவர் 1898 ஏப்ரல் 6ம் நாள் தனது 79வது வயதில் மரித்துப் போனார். அவரது துணைவி நான்சியும் 1902ல் அவர் வழியில் இறைவனைச் சேர்ந்தார்.

அருட்திரு. எட்வர்ட் உவெப் அவர்களின் மகன் திரு. எட்வர்ட் ஆலன் அமெரிக்காவில் பெரிய தொழிலதிபராக இருந்தவர். தனது தந்தை உவெப் நினைவாக ஒரு பெரிய ஆலயம் கட்டிட 5000 டாலரை அன்போடு கொடுத்தார். அதுபோலவே கட்டுமான மொத்த செலவு ரூ.56,000/- கட்டிடப் பொறியாளர் லாசன், ஸ்ட்ராங் அவர்களால் கொடுக்கப்பட்டு வடிவமைக்கப்பட்டது. திருமதி எட்வர்ட் ஆலன் 15000 டாலர் மற்றும் பெடல் ஆர்கன் (Organ) கொடுத்தார்கள்.

திருச்சபையாரின் பெருமுயற்சியாலும், கேப்ரன் ஹால் பள்ளி மாணவ, ஆசிரியர்களின் பங்கீட்டினாலும், ஆலயம் கட்டுவதற்கு பணம் சேகரிக்கப்பட்டது. அருட்திரு. எட்வர்ட் உவெப் நினைவாலயமாக புதிய பெயர் பெற்று உருவாக ஆரம்பித்தது.

**சிம்மக்கல் சிற்றாலய வளர்ச்சி**

சிம்மக்கல்லில் இருந்த ஆலயம் தெற்கு திசை பார்த்த வாசலைக் கொண்டிருந்தாலும் அதற்கு வடக்கு வாசல் ஆலயம் என்ற பெயரே வழங்கி வரப்பட்டது. ஆரம்ப காலத்தில் மதுரை நகர் கோட்டையின் நான்கு வாசல்களுக்கு அப்பால் ஆரம்பப் பள்ளிகள் உண்டாக்கப்பட்டு, அதுவே ஆலயங்களாகவும், விளங்கினபடியால் அந்த திசைகளின் பெயர்களே ஆலயங்களுக்கு இன்றளவும் ஒட்டிக் கொண்டன.

இந்த ஆலயத்தின் முதல் ஆயர் சவரியப்பன் சைமன் என்றும், அவர் 1891-1901 வரை ஆயராக இருந்த காலத்தில் ஆலய ஆண்டறிக்கை ஒழுங்காகப் பதிவு செய்யப்பட்டிருந்தது. சிம்மக்கல் ஆலயம் இடம் மாற்றப்பட்டு புதிய ஆலயம் கட்ட முடிவு செய்யப்பட்டது.

பல்வேறு வழிகளில் சேகரிக்கப்பட்ட பணத்தைக் கொண்டு 8-2-1920 அன்று ஆலய அடிக்கல் நாட்டு விழா வெகுசிறப்பாக நடைபெற்றது. ஆலன்வெப்புடன் இணைந்து மேலும் இருவர் கோவிலின் வளர்ச்சிக்கு காரணமாக இருந்ததால், அவர்களுடைய பெயர்கள் ஆலய மேசைக்கு மேல்

பொறிக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

**உவெப் ஆலயத்தின் அமைப்பு**

உவெப் நினைவாலயம் மதுரை மாநகரில் மிகப்பெரிய ஆலயமாகவும் கம்பீரமான வெளித்தோற்றம் பிரமிக்கத்தக்கதாகவும் அமைந்துள்ளது. இந்த ஆலயம் மங்களபுரம் கல்கோவில் என்றும், பொன்னகரம் கல்கோவில் என்றும் பிறசமய மக்கள் அழைப்பதாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆலயம் நான்கு பக்கமும் இட வசதியும், காற்றோட்டமுள்ள பெரிய சன்னல்களையும் கொண்டுள்ளது. ஆலயத்தின் தரைப்பகுதி விஸ்தாரமாகவும், இரண்டு பக்கமும் பால்கனி வசதி படிக்கட்டு போன்ற சலமான சிமெண்ட் இருக்கைகள் வடிவமைப்பில் கட்டப்பட்டுள்ளது. வெளிச்சத்தையும், காற்றோட்டத்தையும் தொடுகின்ற தூண்களும், பெரிய பிரதான வாசலோடு மொத்தம் ஆறு வாசல்கள், கதவுகளோடு உறுதியாக அமைக்கப்பட்டுள்ளது.

**பலிபீடம் (alter)**

பலிபீடமானது நீளமாகவும், வசதியாகவும் அமைக்கப்பட்டுள்ளது. பீட மேசையும் திரையும் மற்றும் பின்னால் அமைக்கப்பட்டுள்ள இயேசுவின் முழு உருவத்தினையும் சித்தரிக்கும் வகையில் ஓவியக் கண்ணாடியும் அமைந்திருப்பது பார்ப்பதற்கே அனைவரையும் கவரக் கூடியதாக எட்வர்ட் ஆலன் உவெப் கொடுத்த (கண்ணாடி ஓவியம்) பெருங்கொடையாக பதிக்கப்பட்டுள்ளது. இந்த ஆலயத்தின் தனிச் சிறப்பாகும்.

ஆலய மணிக்கூண்டும், மக்கள் அமர்விடமும் விசாலமாக நன்கு அமையப் பெற்றுள்ளது. ஆலய வளாகத்திலேயே ஆயருக்கு இல்லம் ஒன்றும் அமைந்துள்ளது. ஆலயம், பொன்னகரம் மெயின் ரோட்டில் அமைந்துள்ளதால் அனைவராலும் கவரப்பட்ட மகிமை பொருந்திய ஆலயமாக அமைந்து விட்டது.

**உவெப் ஆலய சிறப்பு**

மதுரை - முகவை திருமண்டலம் ஆரம்பிக்கப்பட்டது இந்த ஆலயத்தில்தான். 1947ல் அக்டோபர் 13ம் நாள் மாலை 2000 திருச்சபையார் அணிவகுத்த நிலையில், இரண்டு சபைகளைச் சார்ந்த குருமார்களோடு (SIUC, CIBC) பேராயர் லெஸ்லி நியூபிகின் ஆகியோர் வடக்குவாசல் உவெப் ஆலயத்தில் நுழைந்தனர். விழாவினை சங்கை சி.சி. ஒயிட் (தலைவர். மதுரை திருச்சபை மன்றம்) சிறப்பினை அறிவித்தார். இரண்டு சபை பிரதிநிதிகள் சங்கை. பால்ராஜ் தாமஸ், சங்கை. சுனோன் ஜான் ஆசீர்வாதம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

Rev. நீல் அவர்கள் முதல் மதுரை முகவைத் திருமண்டலப் பேராயராக 12-10-1947ல் உவெப் ஆலயத்தில் பொறுப்பேற்றார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பேராயர்கள் லெஸ்லி நியூபிகின், ஜார்ஜ் தேவதாஸ், டேவிட் ஞானையா/ போத்திராஜீலு ஆகியோர் திருநிலைப்படுத்தல் விழா இங்குதான் நடந்தேறியது.

**பேசாத பிரசங்க பீடம்**

கடவுளின் திருவசனத்தைக் காட்டி, அதன் வழியாக கடவுளின் திருநாமத்தைப் பரப்புவதற்கு பேசாத பிரசங்க பீடம் ஆலயத்தின் வெளியே. பிற சமய மக்கள் படித்துப் பார்த்து பயன்பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

**ஆலயத்தில் பணிபுரிந்த ஆயர்கள் பற்றிய விபரம்**

1891 முதல் 1945 வரை ஆலயமானது அமெரிக்கன் மிஷன் மதுரை என்ற அமைப்பின் கீழ் இயங்கியது.

கீழ்க்கண்ட 4 ஆயர்கள் பணிபுரிந்த விபரம்:

**1. Rev.சவரியப்பன் சைமன் 1891-1901**

சிம்மக்கல்லில் ஆரம்பிக்கப்பட்ட ஆலயத்தின் முதல் ஆயர் இவர். கீர்த்தனைப் பாடல்கள் எழுதுவதில் சிறந்தவர். அங்கேயே அவருக்கு ஒரு இல்லம் கட்டப்பட்டது. அது இன்றும் மாநகராட்சி ஹோமியோபதி இல்லமாக ஆட்டுமந்தைக்கு அருகே மாற்றமடைந்துள்ளது.

**2. Rev. பிலிப்ஸ் தங்கம் கேபிரியேல் 1904-1920**

வடக்கு ஒன்றியத் திருச்சபையின் உபதேசியாராக 1902 முதல் பணிபுரிந்தார். 1904ல் திருச்சபை போதகரானார். இவருடைய தந்தை காபிரியேல் உபதேசியாரின் சகோதரன் தான் Rev. சவரியம்மன் சைமன். தங்கம் போதகரின் குடும்பத்தாரும் ஆலயம் கட்டிட கற்களை சுமந்து போட்டிருக்கிறார்கள்.

1926ல் ஆகஸ்ட் 2ஆவது வாரம் பாலர் ஞாயிறு இவர் காலத்தில்தான் இந்த ஆலயத்தில் முதலாவதாக தொடங்கப்பட்டது என்று திருமதி.ஸ்டான்லி மெய்யப்பன் கூறியுள்ளார். 1915ல் தங்கம் போதகர் முயற்சியால் திரு. பிச்சைமுத்து என்பவர் வழங்கிய நிலத்தில் தத்தனேரியில் உள்ள அருள்தாஸ்புரத்தில் உவைப் ஆலயத்தின் கிளை நிறுவப்பட்டு சபை இன்றும் கம்பீரமாக புதுப்பொலிவுடன் நிற்கிறது என்று திருமதி.பொன்னுத்தாய் என்பவர் பதிவு செய்துள்ளார்.

**3. Rev. பர்னபாஸ் 1920-1939**

உவெப் ஆலயத்தில் பணிபுரிந்த முதல் ஆயர் ஆவார். இவர் காலத்தில் 1923ல் ஆர்கன் ஒன்று செல்வி நாய்ஸ் அவர்கள் முயற்சியால் திருமதி உவெப் வழங்கியுள்ளார். அதுபோல திரு. பர்னபாஸ் ரைட்டர் ஒரு சுவர்க் கடிகாரம் வழங்கியுள்ளார்.

**4. பால் ஜேக்கப் 1939-1945**

உழைப்பாலும் அன்பாலும் சபை மக்களை கவரக்கூடிய ஆயர் இவர். உவெப் ஆலயம் 4 கிளை சபைகளைக் கொண்டது. அவையாவன.

C.S.I. இம்மானுவேல் ஆலயம், சோழவந்தான் (1982)

C.S.I. ஆலயம். தேனூர் (1965)

C.S.I. ஆலயம், சமயநல்லூர் (1912)

C.S.I. ஆலயம், அருள்தாஸ்புரம் (1915)

சி.எஸ்.ஐ.யுடன் இணைந்த பிற்பாடு உவெப் ஆலயத்தில் பணியாற்றிய ஆயர்கள்:

**5. Rev. நல்லதம்பி 1945-52**

ஆலய சொத்துக்களை பதிவு செய்தவர். சாய்ந்திருந்த ஆலய மணியை மராமத்து பார்த்து சரி செய்தவர்.

**6. Rev. எட்வர்ட் 1952-53**

அதிகம் பேசாமல் பணி செய்தவர்

**7. Rev. காபிரியேல் துரைராஜ் 1953-59**

திருமண்டல வாலிபர் சங்கத்தை ஏற்படுத்தியவர். வலசை ஜோன் ஆசீர்வாதம் நினைவு ஆலயம் கட்டினவர். பூந்தோட்ட வாலிபர் சங்கம், பசுமலை வாலிபர் சங்கம், திருமண்டல வாலிபர் சங்கம் ஆகிய சங்கங்களை இணைத்தவர்.

**8. Rev. நரசிங்கம் 1959–61, 1964–67**

ஆலயத்தின் சுவர்களை எழுப்பினவர். மூவழி மின்சார இணைப்பு இவர் காலத்தில் கிடைக்கப் பெற்றது.

**9. Rev. அதிசய தாஸ் 1961–64, 1967–72**

அனைவருக்கும் உதவி செய்பவர். சபையை ஈடுபாட்டுடன் கொண்டு சென்றவர். பழுத்த நினைவுகள் கொண்டவர்.

**10. Rev.M.J.தனராஜ் 1972–81**

பாடகர் குழுவும், காணிக்கைப் பெட்டியும். புத்தாண்டு ஊர்வலமும், குடும்ப ஒளி விழாவும், இவர் கொடுத்த கொடைகள். இவர் இங்கிலாந்து சென்றிருந்த சமயம் ஞானவரம் பொறுப்பில் இருந்தார்கள். உவெப் ஆலயத்தில் Rev. விக்டர் முதிர் வயதிலும் சிறப்பாகப் பணிபுரிந்தார்கள்.

**11. Rev. மில்டன் ஜெகநாதன் 1981–83**

உயிரூட்டும் உபதேசம் செய்தார்கள்.

**12. Rev. ஜான் துரைராஜ் 1983–85**

சிரிப்பார், சிலவற்றை சொல்வார், கண்டு செயற்படுவார், Rev. அனந்தராஜ் துணைப் போதகராக பணியாற்றினார்.

**13. Rev.அன்புராஜ் 1985–89**

இறைப்பணியை முதன்மையாகக் கொண்டு ஆலயத்தில் அனைவர் மனதிலும் தனி இடம் பிடித்தவர்.

**14. Rev. ஜான் நவரத்தினம் 1989–91**

மைக் இல்லாமலேயே தனது வெண்கலக் குரலால் தேவ செய்தி அளிப்பவர். பாடும் திறமை கொண்டவர்.

**15. Rev. கிறிஸ்டோபர் அருள்ராஜ் 1991–97**

இவர் பணிக்காலத்தில் ஆலய வளர்ச்சிப்பணி நடைபெற்றதாக செய்திகள் பதிவிடப்படவில்லை.

**16. Rev. ஜான் கிருபாகரன் 1997–2002**

இவர் பணியாற்றிய காலத்தில்தான். ஆலயத்தின் பின்பகுதியில் சமுதாயக் கூடத்தின் கீழ்ப்பகுதியும், முதல் மாடியும் கட்டப்பட்டது.

**17. Rev. சைமன் சூர்யோதயா 2002–2011**

அமைதியானவர், சபையை சுமுகமாக நடத்திச் சென்றவர்.

**18. Rev. அருள் விஜயகுமார் 2011–2014**

அருள்தாஸ்புரம் புதிய ஆலய கட்டுமானப் பணிக்கு வித்திட்டு, பெரும்பாலான கட்டட பணிகள் இவர் காலத்தில் முடிக்கப்பட்டது.

**19. Rev. M.வரதராஜன் 2014–2017**

அருள்தாஸ்புரம் ஆலயம் கட்டி முடிப்பதற்கும், ஆலய திருநிலைப்படுத்தவும், பெரும்பங்காற்றினார். ஆலய ஆராதனை குறித்த நேரத்தில் நடைபெறவும், குடும்ப பிரார்த்தனை ஒவ்வொரு வாரமும் நடத்தவும் உறுதி செய்தார்.

**20. Rev. டேவிட் உதயகுமார் 2017–2019**

உவெப் நினைவாலயத்தில் பணியாற்ற வரும் ஒவ்வொரு ஆயரும் தங்குவதற்கு ஆயர் இல்லம் கட்டுவதற்கு மிகவும் உழைத்தவர்.

**21. Rev.Dr.A.யாக்கோபு 2019–2023**

**22, Rev. Dr. ஞான ஆனந்தராஜ்**

01.10.2023 பொறுப்பேற்றுள்ளார். ஆலய செயலருடன் இணைந்து திருச்சபை மக்கள் அனைவரும் வேதத்தை ஆழ்ந்து படிக்க, ஒவ்வொரு வாரமும் வேத வினாடிவினா போட்டிகளில் கலந்துகொள்ள ஊக்கப்படுத்தி பரிசுகளை வழங்கி வருகிறார். புதன் கிழமைதோறும் ஜெப வீரர்கள் கூடி, வியாதியஸ்தர்களுக்காகவும், ஜெப குறிப்புகளுக்காகவும், ஆலய வளர்ச்சிக்காகவும் சிறப்பு ஜெபம் ஏறெடுக்கப்படுகிறது.

உவெப் ஆலய படிப்படியான வளர்ச்சிப் பணிகளில் முக்கிய பங்கேற்றவர்கள் Prof. A. ரஞ்சிதம், ஸ்டான்லி மெய்யப்பன், ஜேசுதாஸ், கிருத்துவதாசன், J.R. செல்லமுத்து, A. நித்தியானந்தம், S. ஜேம்ஸ், V. ஞானையா, N. தேவபிரியம், P. பால், A. செல்லதுரை, நான்சி டேவிட், ரூபி தேவசகாயம், நெப்போலியன், விக்டர் தானியேல், விஜி தெய்வநாயகம், சாத்ராக்பால், ஜான் எட்வர்ட், R. அதிசயம். தவசம்மாள், குருபாதம். தேவவரம். செல்வராஜ் மற்றும் இன்னாள் வரை பணி செய்கின்ற மூப்பர்கள்.

**ஞாயிறு பள்ளி கூடுகை**

ஆலயத்தில் பாடகர் குழு, பெண் ஐக்கிய சங்கம், ஆண்கள் ஐக்கிய சங்கம், இளைஞர் ஐக்கிய சங்கம் ஆகியவை நன்கு நடைபெற்று வருகிறது. உவெப் நினைவாலயமானது இன்றும் கெம்பீரமாக பொன்னகரம் மெயின் ரோட்டில் அமைந்துள்ளதால் அனைத்து மத மக்களும் பயபக்தியோடு ஆலயத்தைக் கடந்து செல்வது கண்கொள்ளாக் காட்சியாகத் திகழ்கிறது. இத்தகைய சிறப்பு வாய்ந்த உவெப் ஆலய வரலாற்றைப் பதிவு செய்திட உதவிய நூல்கள்





2010ல் வெளியிடப்பட்ட மலர், 2002 வெளியிடப்பட்ட அறுப்பின் பண்டிகை மலர் மற்றும் அதில் எழுதப்பட்டுள்ள A. செல்வி அவர்களின் M.Phil கட்டுரையில் கண்டுள்ள விவரங்கள். இந்த அனைத்தையும் எனக்கு கொடுத்துதவிய முன்னாள் செயலர் மற்றும் பொருளாளரான திரு. P. பென்னிராஜ் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியை சமர்ப்பிக்கின்றேன்.

# சேலம் வரலாற்றுச் சங்கத்தின் பழுதுபார்த்து நிலைநிறுத்தும் திருப்பணிகள்

ஜெ பர்னபாஸ்
சேலம் வரலாற்றுச் சங்கம்

**முதற்கட்ட திருப்பணிகள் (Phase -1- Restoration Works):**

**ஐந்து வரலாற்றுச் சிறப்புமிக்க கல்லறைகள்:**

'எருசலேமின் அலங்கத்தைப் பழுதுபார்க்கிற வேலை நடந்தேறுகிறது. . . இடிக்கப்பட்ட இடங்கள் அடைபட்டு வருகின்றன. . . ' நெகேமியா 4 :7 (தரங்கம்பாடி யூபிலி பதிப்பு)

சேலம் 4 ரோடு பெரமனூர் ஆங்கிலேயர் கல்லறைத் தோட்டத்தில் உள்ள பாழடைந்துபோன சேலம் வரலாற்று நபர்களின் (Personalities in Salem History) கல்லறைகளைப் பழுதுபார்த்து நிலைநிறுத்தும் (Repair and Restoration Works) முதற்கட்ட திருப்பணிகளை (Phase -1 - Restoration works) சேலம் வரலாற்றுச் சங்கத்தாராகிய நாங்கள் கடந்த (செப்டம்பர் - '23 ) மாதம் நிறைவேற்றியுள்ளோம். இது இனி தொடர்ந்து நடைபெறும் பல மாதங்களுக்கான திட்டமாகும். இந்த பெரிய முயற்சியின் முதற்கட்ட பணியில் ஐந்து மிக முக்கியமான வரலாற்று நபர்களின் கல்லறைகளை பழுதுபார்த்து நிலைநிறுத்தும் பணிகளை நாங்கள் மேற்கொண்டோம்.

இந்த விதத்தில் இப்படியாக பழுதுபார்த்து நிலைநிறுத்தப்படும் கல்லறைகளில், 10'L 5' h 3/4't inches என்ற அளவுள்ள மெருகூட்டப்பட்ட கருங்கற் பலகைகளில் (Black granite slabs) 'Restored by Salem Historical Society - September -2023' என்ற ஆங்கில வாசகம் பொறிக்கப்பட்டு, அது அந்த கல்லறைகளில் பார்வையான இடத்தில் பதிக்கப்படுகிறது. இப்படியாக, தற்பொழுது அந்த முதற்கட்ட ஐந்து கல்லறைகளும் பழுது பார்க்கப்பட்டு நிலைநிறுத்தப்பட்டது. இன்னமும் இந்த கல்லறைகளுக்கு சுண்ணாம்புப் பூச்சும், கல்வெட்டு எழுத்துக்களின் மீது வர்ணப் பூச்சும் செய்யப்பட இருக்கிறது.

**திருமதி. எலிசவெத் ஸ்விப்ட் என்ற லிசி அம்மாள் கல்லறை:** ( Mr. Elizabeth Swift @ Lizzie 's Memorial)

லண்டன் மிஷனெரி சங்கத் திருத்தொண்டர் சங்கை. வில்லியம் இராபின்சன் ஐயர் (Rev. William Robinson, L. M. S, - Period of Service -1884-1909) அவர்களின் மனைவி திருமதி. எலிசபெத் ஸ்விப்ட் என்ற லிசி அம்மாளின் நினைவுச் சின்னம் ஒரு அழகான கலைப்படைப்பு ஆகும். இத்தாலி நாட்டு பளிங்கு கல்லில் (Italian Marble) வடிவமைக்கப்பட்ட நெடிதாக நிற்கும் இந்த தலைக் கல் (Headstone), இது அங்கே ஜெனோவா மாநகரில் 'Achille - Canessa' என்ற சிற்பங்கள், நினைவுச் சின்னங்கள், செய்யும் அமைப்பு உருவாக்கியிருக்கிறது. அங்கிருந்து இந்த நினைவுச் சின்னம் கொண்டுவரப்பட்டு இங்கே நிறுவப்பட்டது. இந்த கல்லறையை சேலம் மாவட்ட பிரிட்டீஷ் ஆட்சித் தலைவராக இருந்த திரு. F. J. ரிச்சர்ட்ஸ் (1903) தனது சேலம் மாவட்ட கெஜெட்டியரில் பதிவுசெய்திருக்கிறார். (Of Lizzie, wife of the Rev. William Robinson of the London Missionary Society (died 20th. December 1896). மேலும், திருமதி. எலிசபெத் ஸ்விப்ட் என்ற லிசி அம்மாளின் நினைவிற்கு சேலம் CSI லெக்லர் நினைவாலயத்தின் பலிபீட சுவற்றில் ஒரு நினைவு கல்வெட்டு (Memorial Plaque) பதிக்கப்பட்டுள்ளது.

**அன்றும், இன்றும்**

சிறப்பான இந்த நினைவுச் சின்னம் சேதமடையாது இதுநாள் வரையில் இந்த கல்லறைத் தோட்டத்தில் தப்பிப் பிழைத்து நின்றது ஒரு அதிசயம்தான். ஒருமுறை இந்த கல்லறைத் தோட்டம் அருகில் இருந்தவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டபோது,



இதன் செங்கல் கட்டுமானங்கள் இடிக்கப்பட்டிருக்கலாம் என்று நினைக்கிறேன். இந்த கல்லறையைச் சுற்றிலும் அலங்கார கம்பி வேலி (Ornamental Grill Works) இருந்திருக்க வாய்ப்பிருக்கிறது. ஆனால் நான் பார்த்த நாட்களில் எந்த பிடிமானமும் இன்றி, வெறும் பளிங்கு தலைக்கல் மட்டும் ஆபத்தில் என்று விழுமோ என்ற நிலையில், ஆடிக் கொண்டிருந்தது. அதனால்தான் இதை முதல் வேலையாக பாதுகாத்தோம். இந்த நினைவுச் சின்னத்தைச் சுற்றிலும் 6‘அடிக்கு, 5‘ அடி, 1‘ அடி உயர செவ்வக வடிவ கல்லறை பீடம் கட்டப்பட்டது.

தனது இந்திய மகன்களும், மகள்களும், பாவ அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்பட வேண்டும் என்பதே அம்மாவின் இதய வாஞ்சையாய் இருந்தது

**பாதையற்ற பாதைகளில் பயணித்தவர்கள்:**

சேலம் வரலாற்றில் 'பெரிய துரை' என்று அழைக்கப்பட்ட சங்கை W. இராபீன்சன் ஐயரின் உற்ற துணையாக, அவரது ஊழியப் பாதைகளில் பற்றித் தொடரும் நிழல்போல, உடன் பயணித்த லிசி அம்மா சேலம் பகுதிகளிலும், மெட்ராஸ், மற்றும் திருப்பத்தூர் பகுதிகளிலுமாக ஏறத்தாழ 16 ஆண்டுகள் தன் அன்பு கணவனான சங்கை. இராபீன்சன் ஐயரோடு இணைந்து பணியாற்றினார். பாதையற்ற பாதைகளில் மாட்டு வண்டிகளில், டோலிகளிலும், கணவனும், மனைவியுமாக, பயணித்து மலைகளிலும், கிராமங்கள்தோறும் சுவிசேஷப் பணியாற்றிய சாதனை நாட்கள் ஒன்றில், கொடிய விஷப் பூச்சியின் தீண்டுதலுக்கு ஆளான அம்மையார் அதிலிருந்து மீளாத நிலையிலேயே சேலத்தில் மரணத்தை தழுவிக் கொண்டார். (Mrs.Robinson became a great sufferer from blood poisoning, caused by the sting or bite of some venomous insect.)

**20-12-1896:**

சேலம் 4 ரோடு பெரமனூர் ஆங்கிலேயர் கல்லறைத் தோட்டத்தில் லிசி அம்மாவின் அடக்கத்திற்கு அன்று ஒரு பெருந்திரள் கூட்டம் ஐரோப்பியர்களும், இந்தியர்களுமாக கூடியது. அடக்க ஆராதனையை நடத்தி கூட்டத்தில் பேசிய சங்கை லெக்லர் ஐயரின் மருமகனான சங்கை மாரிஸ் பிலிப்ஸ் ஐயர் **'தனது இந்திய மகன்களும், மகள்களும், பாவ அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்பட வேண்டும் என்பதே அம்மாவின் இதய வாஞ்சையாய் இருந்தது.'** என்றார்.

**இஸ்ரவேலே நீ என்னால் மறக்கப்படுவதில்லை:**

'என் மக்களோ என்னை நீண்ட நெடிய நாட்களாக மறந்தே போய்விட்டனர்' என்று ஒருவேளை அவர் இப்படி சொல்லியிருக்கலாமோ என்று எண்ணத் தோன்றுகிறது. ஆனாலும், ஆண்டவர் இவரை நினைத்திருந்ததால் இன்று இவரது கோரி (சமாதி) காக்கப்பட்டிருக்கிறது. 'அவன் கல்லறைக்கு கொண்டுவரப்படுகிறான்; அவன் கோரி காக்கப்பட்டிருக்கும்' என்ற வாசகம் (யோபு :21:32.) உண்மையானதும், தீர்க்கதரிசனமானதும் ஆகும். நன்றி பாராட்டும் விதமாக, நினைவுகூறுதல், இன்று இவரது கல்லறை பழுது பார்க்கப்பட்டு நிலை நிறுத்தப்பட்டிருக்கிறது. இந்தப் பணிகளைச் செய்ய எங்களுக்கு ஊக்கமும், ஆக்கமும், தந்த அன்பு உள்ளங்களுக்கு நன்றி சொல்கிறேன்.

**வரலாற்றின் ஏடுகளைப் புரட்டிப் பார்க்கின்ற வேளைகளில்**

சங்கை. W. இராபீன்சன் ஐயர் சேலம் வரலாற்றில் புகழ் பெற்றவர், பேரறிஞர், நூலாசிரியர். இவர் எழுதிய 'Life of Ringeltaube – the Rishi ', 'God and Son of God', 'A Summary of Christian Doctrine, ' 'From Brahma to Christ, ' 'சேலம் ஞானப் பாட்டுப் புத்தகம்' (1908) , ஆகியவை இவர் புகழ் சொல்லும்.

**இராபீன்சன்பேட்டை (Robinson pettai), எலிசபெத்பேட்டை (Elizabeth pettai) ஆகிய கிறிஸ்தவ குடியிருப்புகள்:**

சங்கை W. இராபீன்சன் ஐயர் ஏற்காட்டில் ஏழை கிறிஸ்தவர்களுக்காக ஒரு நிலத்தை வாங்கி, அங்கே அவர்கள் தங்கள் சொந்த செலவில் வீடுகளைக் கட்டிக் கொண்டு வாழ்ந்துவர அனுமதியளித்தார். அந்த இடம் ஏற்காடு லுத்தர்பேட்டைக்கும், லாங்லிப்பேட்டைக்கும் இடையில் இருந்தது. அந்த குடியிருப்பு 'இராபீன்சன் பேட்டை' என்று ஐயர் நினைவாக அழைக்கப்பட்டது.

சங்கை இராபீன்சன் ஐயர் ஒரு குறிப்பிட்ட சமுதாய



மக்களை அவர்களின் பாவமான வாழ்கையிலிருந்து மீட்டு, அவர்களுக்காக சேலம் மாவட்டத்தில் சுக்கம்பட்டி, முத்தம்பட்டி, என்ற இடங்களில் மறுவாழ்வு குடியிருப்புகளை / கிராமங்களை உருவாக்கி அவர்களுக்கு விடுதலை வாழ்வளித்தார். இப்படி உருவாக்கப்பட்ட இந்த இரண்டு குடியிருப்புகளில் சுக்கம்பட்டியில் இருந்த குடியிருப்பிற்கு தனது காலஞ்சென்ற அன்பு மனைவியின் நினைவாக 'எலிசபெத் பேட்டை' என்று பெயரிட்டார்.







**சேலம் வரலாற்றிற்கான பங்களிப்பு:**

அந்த நாட்களில் சேலம் அடைக்கல நகரில் வசித்துவந்த கனம் நெகேமியா உபதேசியாரிடம் கேட்டு, அடைக்கல நகர் வரலாற்றையும், அதன் பூர்வீக குடிகள் (Original Settlers) பற்றியும், சங்கை இராபின்சன் ஐயர் எழுதிவைத்த குறிப்புகள் முக்கியத்துவமானது. தனது ஓய்வு காலத்தில் சங்கை இராபின்சன் ஐயர் எழுதிவைத்த சேலம் மிஷன் பற்றிய வரலாற்று நூலின் கையெழுத்துப் பிரதி இங்கே குறிப்பிடத்தக்கது.

**2, திரு. ஜான் சார்லஸ் பிட்சார்ட்ஸ் கல்லறை :**

சேலம் அஸ்தம்பட்டி பகுதியில் உள்ள குறுக்குச் சாலை (Pritchard's Road) இவர் பெயரில் உள்ளது. புகழ்பெற்ற வழக்கறிஞரான (Barrister at Law) இவர் அன்றைய சேலம் நகராட்சியின் பிரிட்டீஷ் ஆணையாளராக இருந்தார். இவரது கல்லறை மண்ணில் புதைந்து போய் மறையும் அபாயத்தில் இருந்தது. தற்போதைய நிலைநிறுத்தும் பணிகளில் கல்லறை உயரப்படுத்தப்பட்டு, அஞ்சலி செலுத்துவதற்காக சுற்றிலும் மேடான 10 'அடி நீளமும், 7'அடி அகலமும், 1/2 'அடி உயர செவ்வக தளம் அமைக்கப்பட்டது.

**3. இராவ் சாகேப் சங்கை மனுவேல் ஏசடியான் ஐயர் கல்லறை:**

இவரது சமூக சேவைகளைப் பாராட்டி அன்றைய ஆங்கில அரசாங்கம் இவருக்கு 'இராவ் சாகேப் 'என்ற உயரிய விருதை அளித்து கௌரவித்தது. கல்லறைத் தோட்டத்தில் புதிய கல்லறைகளின் நெருக்கத்தால் மண்ணில் புதைந்து, மறைந்து, இல்லாமல் போகும் நிலையிலிருந்த இந்த கல்லறை தலைக்கல் உயரப்படுத்தப்பட்டு, 6'அடிக்கு, 3' அடி அகல, 1' அடி உயர செவ்வகடிவ கல்லறை பீடம் அமைக்கப்பட்டது.

**4. திரு. H. R. பர்ஜெஸ் கல்லறை:**

தென்னிந்திய இரயில்வேயில் ஓய்வு பெற்ற பாதை ஆய்வாளரான இவரது பாழடைந்த கல்லறையை இவரது வழித் தோன்றல் (The great grand niece) கொள்ளு பேத்தி திருமதி. ஜீன் மென்டிஸ் டீ ரோசாரியோ என்பவர் கடந்த 11-8-2011 அன்று நியூசிலாந்து நாட்டிலிருந்து வந்து தரிசித்து அஞ்சலி செலுத்தினார். சிலுவை உடைந்து கல்லறை சேதமடைந்து இருந்தது. இதனை பழுதுபார்த்து புதுப்பித்து, விஷமிகளால் உடைத்துப் போடப்பட்ட சிலுவையை Araldite வைத்து ஒட்டி நிலைநிறுத்தி புனரமைத்தோம்.

**5. திரு. இராஜேந்திரம் செட்டியார் கல்லறை:**

அன்றைய நாளில் சௌராஷ்ட்ரா சமூகத்திலிருந்து சங்கை J. M. லெக்லர் ஐயரின் அழைப்பின்பேரில் கிறிஸ்தவம் தழுவியவர்களின் வழித்தோன்றல் இவர். சேலம் லண்டன் மிஷன் பெரிய கோயிலில் (இன்றைய சேலம் கோட்டை CSI லெக்லர் நினைவாலயம்) செயலாளராகவும், டீக்கனாகவும் இருந்தவர். சேலத்தில் சிறந்த கட்டிடக் கலை வல்லுனராகவும் இவர் விளங்கினார்.

இப்படியாக நாங்கள் பழுதுபார்த்து நிலைநிறுத்தும் திருப்பணிகளுக்காக தேர்ந்தெடுத்த 56 கல்லறைகளில் முதற்கட்டமாக ஒரு 5 கல்லறைகளை மட்டும் பழுதுபார்த்து நிலைநிறுத்தியுள்ளோம். இந்த மிகப் பெரிய பணி தொடர்ந்து நடைபெற உங்களது ஜெபங்களையும் உதவிகளையும் நாடுகிறோம். சேலம் வரலாற்றிலும், நமது சேலம் சீர்திருத்த கிறிஸ்தவ திருச்சபைகளின் வரலாற்றிலும் முக்கிய பங்காற்றிய இவர்களை நாம் மறக்காமல், இவர்களின் கல்லறைகளை அழிவின் விளிம்பிலிருந்து மீட்டு, பாதுகாத்து, வரும் சமுதாயத்திற்கு வரலாற்றின் சாட்சிகளாக நிறுத்துவோம்.



டேனிஷ் மிஷன் உயர்நிலைப் பள்ளி, திருவண்ணாமலை

# ஜெப வீரர் ஜே. அருமை நாயகம்!


ஜி. ஆ. சாந்தக்குமார்

திரு. அருமை நாயகம் என் அம்மாவின் அப்பா. அவர்கள் திருநெல்வேலி ஜில்லாவில் உள்ள பெருமாள்குளம் கிராமத்தில் 1880-ஆம் ஆண்டில் பிறந்தார்கள். மேலச்செவலைச் சேர்ந்த சந்தோஷம் அம்மாளை மணந்தார்கள். அக்காலத்தில் மேலச்செவலில் முதலாவதாகக் கட்டப்பட்ட 'கல்லு வீட்டில்' பாட்டி வசித்தார்கள்.

திருமதி சந்தோஷம் அம்மாளின் தம்பி திரு. செல்வ சிரோமணி நாடார் அவர்கள் பாளையங்கோட்டையில் உள்ள சாரா டக்கர் மேல்நிலைப் பள்ளியில் எழுத்தராகப் பணி புரிந்தாலும், பள்ளியின் நிர்வாகத்தில் அதிகம் பங்கேற்றவர். அவருடைய பிள்ளைகள்: 1) திருமதி. ஜானகி ஸ்டீஃபன், சாரா டக்கர் ஆசிரியைப் பயிற்சிப் பள்ளியின் தலைமை ஆசிரியை. 2) அடுத்தவர் நல்லூரில் உள்ள மேல்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர். 3) திரு. சார்லஸ், பாளையங்கோட்டை மேல்நிலைப் பள்ளியின் ஓவிய ஆசிரியர். 4) டாக்டர் மில்லி.

இது தவிர, என் பாட்டியின் மாமா மகன், திரு. ஜான் சாமுவேல் என்பவர் கிணறு வெட்டுவதற்காக, ஊற்று கண்டுபிடிப்பவர். தமிழ் நாடு மற்றும் ஆந்திராவுக்குச் சென்று ஊற்று கண்டிபிடித்தார்கள். இவருடைய ஒரு மகன், அக்காலத்தில் நேருவுக்கே விமானம் ஓட்டியவர். மற்றொரு மகனான, திரு. தனசிங் டேவிட் பள்ளிகளின் உதவி இயக்குனராகப் பணி புரிந்தார். சுவிசேஷ ஊழியமும் செய்தார்கள்.

திரு. ஜான் சாமுவேலுடைய நெருங்கிய நண்பர்தான், டாக்டர் சாமர்வெல். இவர் மருத்துவராயிருந்து சுவிசேஷகரானவர். கன்னியாகுமரி மாவட்டத்தில் புகழ் பெற்றவர். இவர் நெய்யூரில் உள்ள தெற்கு திருவாங்கூர் மருத்துவச் சேவை மருத்துவ மனையில் 1922 முதல் 1945 வரை பணியாற்றினார். அம்மருத்துவமனையில், கான்சருக்கான ரேடியம் மருத்துவத்தை இந்தியாவிலேயே முதல் முதலாக அறிமுகப்படுத்தியவர். கொளச்சலில் கான்சருக்கான மருத்துவ மனையை நிறுவியவர். அவருடையை சேவையைப் பாராட்டி, தெற்கு கேரளா மறை மாவட்டம் (டயோசிஸ்) காரக்கோணத்தில் உள்ள மருத்துவ மனையை டாக்டர் சாமர்வெல் நினைவு மருத்துவமனை எனப் பெயரிட்டனர்.



என் தாத்தாவைப் பற்றிய இக்கட்டுரையை எழுதுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். காரணம், தாத்தாவின் பெயரை எனக்குச் சூட்டி என் பெற்றோர் அழகு பார்த்தனர்!

மேலும் அக்காலத்தில் திரு. மாரிமுத்து எனும் விவசாயி கிராமத்திலிருந்து வருவார்கள். எங்கள் தாத்தா அவருக்காகக் கடிதங்கள் எழுதிக் கொடுப்பதுண்டு. அவர் ஆங்கிலேய மாவட்ட ஆட்சியாளரை வானளாவப் புகழ்வது வழக்கம். தாத்தா இறந்த பிறகும்கூட அவர் வந்து கொண்டிருந்தார். அவரிடம், 'பேரப்பிள்ளைகளில் யார் தாத்தாவை நினைவு படுத்துகிறார்கள்?' என்ற கேள்விக்கு, என்னைச் சுட்டிக் காட்டினார்கள். காரணம், நானும் அவரைப் போலவே கிணற்றிலிருந்து தண்ணீரைச் சேந்தி, அப்படியே தலையில் கொட்டிக் கொண்டேனாம்! 'எனக்கோ தலையில ஐஸ் வெச்ச மாதிரி இருந்திச்சி!'

1898-ஆம் ஆண்டு முதல் 1902 வரை போதகர் ஹெர்மேன் ஜென்சன் திருவண்ணாமலை டேனிஷ் மிஷனரி சொஸைட்டி எனும் நிறுவனத்தில் பணி புரிந்தார் என்று கூகுள் கூறுகிறது. அப்பொழுது அவர் சுவிசேஷ வேலை மற்றும், ஆசிரியர் பணி புரிய என் தாத்தாவை திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து திருவண்ணாமலைக்கு அழைத்தார். தாத்தா அவர்கள் அவரது ஊரிலேயே முதன் முதலாக இடை நிலை ஆசிரியர் பயிற்சி பெற்றிருந்தார்.

என் தாத்தாவும் அதற்கு இசைந்து, 1898-இல் திருவண்ணாமலை அசலியம்மன் தெருவில் உள்ள டேனிஷ் மிஷன் துவக்கப் பள்ளியின் தலைமை ஆசிரியராகப் பணியில் அமர்ந்தார். அச்சமயம் இப்பள்ளியைத் தவிர விக்டோரியாப் பள்ளி மட்டும்தான் அவ்வூரில் இயங்கியது. அந்த அளவுக்கு, திருவண்ணாமலை மிகவும் பின் தங்கிய ஊராக இருந்தது. 1909-இல், டேனிஷ் மிஷன் துவக்கப் பள்ளி எட்டாவது வகுப்பு வரை கற்பிக்கும் நடுத்தரப் பள்ளியாக உயர்வு பெற்றது. பள்ளியில் எந்த மாணவனாவது வரவில்லை எனில், அன்றைக்கு மாலையே அம்மாணவனின் வீட்டுக்குச் சென்று விசாரிப்பார்கள் என் தாத்தா. வாவ்! இப்படிப்பட்ட கரிசனையுள்ள தலைமை ஆசிரியரை நான் பார்த்ததே இல்லை!

கிறித்தவர்களைத் தீண்டத்தகாதவர்களாகத் தள்ளி வைத்தக் காலமது. அவர்களுக்கு வாடகைக்கு வீடு கொடுக்கவும் ஆள் இல்லை. இதனால், என் தாத்தா சிரமப்பட்டு ஒரு ஓட்டு வீட்டை சிவராத்திரி மடத் தெருவில் வாங்கினார்கள். அவ்வீட்டில், பிற்காலத்தில் என் அம்மாவின் தம்பி, மார்ட்டின் மாமாவின் குடும்பமும், எங்கள் குடும்பமும் சுமார் 30 வருடங்கள் சேர்ந்தே வாழ்ந்தோம். வீடு கிடைக்காத காரணத்தினாலேயே, பிற்காலத்தில், கார்மேல் ஆலயம் (ஆற்காடு லூத்தரன் திருச்சபை) சில பழைய வீடுகளை விலைக்கு வாங்கி உபதேசியார்களுக்கு வாடகைக்கு விட்டது எனது நினைவுக்கு வருகிறது.

தண்ணீர் கிடைக்காத கோடைக் காலத்தில் இந்துக் கோயில்களில் உள்ள குளங்களிலிருந்து தண்ணீர் எடுக்க கிறித்தவர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. இதனால் புதிய பேருந்து நிலையத்துக்குப் பின்னால் உள்ள பழைய அரசு விருந்தினர் பங்களாவுக்கு அருகே இருக்கும் கிணற்றிலிருந்து தண்ணீரை எடுத்து, பீப்பாயில் அடைத்து, மாட்டு வண்டி மூலமாக வீடுகளுக்கு அனுப்பப்பட்டது. அக்காலத்தில், பள்ளியின் மேல் மாடியில் ஒரு தற்காலிகக் கீற்றுக் கொட்டகையில் கார்மேல் ஆலயம் துவக்கப்பட்டது. என் தாத்தா முதல் சுவிசேஷகராகப் பணி புரிய ஆரம்பித்தார். ஊருக்குள் தெரு முனைகளில் நின்றுக் கொண்டு, துண்டுப் பிரதிகள் மூலமாகவும், நேராகவும் இறைவனின் செய்தியைப் பகிர்ந்தார்கள். விடுமுறை நாட்களில் சுற்றியுள்ள கிராமங்களுக்குச் சென்று உதவிகள் புரிந்து, சுவிசேஷப் பணியை மேற்கொண்டார்கள். பிற்காலத்தில், என் தாத்தா ஒரு சிறிய குழுவை உருவாக்கினார். அதில் டேனிஷ் மிஷன் உயர் நிலைப் பள்ளி ஆசிரியர், திரு. தேவநேசனும், (இவர் பின்பு உயர் நிலைப் பள்ளிக்கே தலைமை ஆசிரியராகப் பொறுப்பேற்றார்.) ஓவிய ஆசிரியர் மற்றும் பிடில் வாசிப்பவருமாகிய திரு. அலெக்ஸாண்டரும் இப்பணியில் தங்களை ஐக்கியப்படுத்திக் கொண்டனர். இந்த உயர்நிலைப் பள்ளி வேறொரு பள்ளி. பிற்காலத்தில் என் தாத்தா வேலை செய்த நடுநிலைப் பள்ளி இதனுடன் இணைந்தது.

1914-இல் ஆற்காடு லூத்தரன் ஆலயம் கட்டப்பட்டது. இக்கட்டுமானத்தில் அருமை நாயகம் தாத்தாவின் பங்கு கணிசமாக இருந்தது. ஆலயத்துக்கு நகராட்சியிலிருந்து கட்டணமில்லாத தண்ணீர் இணைப்புக் கிடைத்தது. என் தாய் மாமா, திரு. மார்டின் நகராட்சி அலுவலகத்தில் காசாளராகப் பணி புரிந்தார்கள். என் தாத்தா அந்நாட்களில் தினமும் விடியற்காலை ஐந்து மணிக்கு எழுந்து, நெடு முழங்காலில் நின்று ஜெபம் செய்தார்கள். ஒரு மணி நேரத்துக்கு மேலாகத் தினமும் இவ்வாறு ஜெபம் செய்ததால், அவரது கால் முட்டியில் "காய்ப்பு" காய்த்து விட்டது. கடவுள் மேல் வைத்த அவரது அன்பும், ஐக்கிய உறவும் இதன் மூலம் உள்ளங்கை நெல்லிக்கனி போலத் தெரிகிறது. இப்படிப்பட்ட ஜெபத்தினாலேயே அவருடைய சந்ததிகளாகிய எங்களுக்கு கடவுளுடைய அபரிமிதமான ஆசீர்வாதம்



கிடைத்திருக்கிறது என்பதில் நாங்கள் மிகுந்த நம்பிக்கையுடன் இருக்கிறோம்.

என் தாத்தாவுக்கு சக்கரை வியாதி உண்டு. அவருடைய முதுகில் ஒரு கட்டி வந்தது. சக்கரையினாலா அல்லது ராஜப் பிளவையினாலா என்பது தெரியவில்லை. அக்காலத்தில் மருத்துவம் திருவண்ணாமலைப் போன்றப் பின்னடைந்த ஊர்களில் அவ்வளவாக வளர்ச்சி அடையவில்லை. மருத்துவர் பழுக்காத அக்கட்டியை அறுவைச் சிகிச்சை செய்தார். அது எதிர்பார்த்த பலனைக் கொடுக்கவில்லை. 26. 10. 1935 அன்று, கடவுளால் எடுத்துக் கொள்ளப்பட்டார்.

அவர் இறந்த தினம் தீபாவளி. இருப்பினும் அத்தெருவே பண்டிகையைக் கொண்டாடவில்லை. அவர் மீது அவ்வளவு மரியாதை! “நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்!” 2 தீமோ. 4:7

திருவண்ணாமலையில் என் பாட்டி, திருமதி. சந்தோஷம்மாள் மட்டுமே அக்காலத்தில் எட்டாம் வகுப்பு தேர்வு பெற்றவர். ஊர் அவ்வளவு பின் தங்கி இருந்தது. அவர்கள் திருவண்ணாமலையில் முதல் பெண் கவுன்சிலராக ஆங்கிலேயர்களால் நியமிக்கப்பட்டார்கள். அது மட்டுமல்ல. எல்லாப் பேரன், பேத்திகளையும் குளிப்பாட்டி, மருந்து கொடுத்துப் பேணி வளர்த்தவர். உண்மைப் பேச வேண்டுமென்றும், திருடக்கூடாது என்றும் எங்களுக்குக் கற்றுக் கொடுத்தவர். எங்கள் இரு குடும்பங்களையும் அரவணைத்து ஒற்றுமையாக வாழ வழி வகுத்தவர்.

“அருமைநாயகம் தாத்தா 55-ஆவது வயசில இறந்தாங்க. அந்தச் சமயத்தில என் தாய் மாமா, பரமானந்தம் வேலைக்கு வந்துட்டதால, குடும்பத்தை நகர்த்த முடிஞ்சது. பாட்டிக்கு 5 பிள்ளைகள்; 2 பெண்கள். ஏழு பேரையும் காப்பாத்திப் படிக்க வெச்சி, வேலையில் அமர வெச்சி, திருமணம் செஞ்சி வெச்சாங்க! அவுங்க சிக்கனமா இருந்தது மட்டுமல்ல; வீட்டு வேலைகளான, மாடு, கோழி வளர்க்கறது, வருடாந்தர நெல்லை வாங்கிக் குதிர்ல போடறது, புளி வாங்கறது போன்ற எல்லாத்தையும் பாத்துகிட்டாங்க. எங்க வாழ்க்கையிலப் பிரச்சனைகள் கம்மியா இருந்திச்சி. ஆகையால, பாட்டியே எங்க குடும்பத்தின் முதுகெலும்பு!”னு என் அண்ணன் அடிக்கடி பாராட்டுவாங்க!




திரு. அருமைநாயகம் தாத்தாவின் உறவினர்கள் இதைப் படிக்க நேரிட்டால், தயவுசெய்து 9444148832 என்ற எண்ணில் என்னைத் தொடர்பு கொள்ளவும். இக்கட்டுரையை விரிவு படுத்தவும், செம்மைப் படுத்தவும் அது உதவும்!

கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

மாத ஆய்விதழ் சந்தா விபரம்

| சந்தா விபரம் | உள்நாடு |
|---|---|
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

வங்கி விபரம்

Name: Christian Historical Society

A/c Number : 1748 020000 4906

Bank name : Federal Bank

IFSC code: FDRL0001748

“கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்”
மாத ஆய்விதழை நீங்கள் தொடர்ந்து பெற்றுக் கொள்ள
G-Pay மூலம் நன்கொடை செலுத்த 91767 80001 என்ற எண்ணுக்கு செலுத்தவும்
காசோலை மற்றும் வரைவோலை செலுத்த
‘கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்’
( Christian Historical Society )
என்ற பெயரில் எடுக்கவும்

ஆசிரியர்

கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,
கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,
பங்களாச் சுரண்டை-627859,
தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)
04633 290401, 91767 80001

christianhistoricalsociety.in
tchsportal.co.in

christianhistorical@gmail.com

# ஜோன்ஸ் ஜான் பீட்டர்

டாக்டர் எஸ்.ஸ்டீபன் ராஜ்குமார் இன்பநாதன்



ஜோன்ஸ் ஜான் பீட்டர், 1847ம் ஆண்டு வேல்ஸில் நாட்டில் பிறந்தார். இளம் வயதிலேயே தனது பெற்றோருடன் அமெரிக்காவிற்கு குடிபெயர்ந்தார். அமெரிக்காவில் உள்ள பென்சில்வேனியா மாகாணத்தில், ஷெனாண் டோவா நகரில், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை தமது சொந்த மீட்பராக ஏற்றுக்கொண்டார். தனது கல்லூரி படிப்பை வெஸ்டர்ன் ரிசர்வ் கல்லூரியில் பயின்றார். அதனை தொடர்ந்து இறையியல் கல்வியை உலக புகழ் பெற்ற அன்டடோவர் இறையியல் கல்லூரியில் திறம்பட கற்றுக்கொண்டார். பின்னர் சாராஆமி ஹோஸ்போர்ட் என்பவரை திருமணம் செய்து கொண்டார்.

வெர்மான்ட்டின் சித்தெண்டனில் உள்ள ஒரு தேவாலயத்தின் ஆயராக திருப்பணியை தொடங்கினார். அவருடைய திறமையையும், அர்ப்பணிப்பையும் கண்ட அவரது நண்பர், இயற்கையை வணங்குகிற அமெரிக்காவின் பழங்குடி மக்களான CHOCTAW இந்தியர்கள் வாழ்கிற பகுதியில் திருப்பணியாற்ற ஆலோசனை கூறினார். அந்த ஆலோசனையை ஏற்று ABCM அருட்பணி இயக்கத்திற்கு பூர்வீக அமெரிக்கர்கள் மத்தியில் திருப்பணிசெய்ய விண்ணப்பித்தார். ABCM அருட்பணி இயக்கம்தான் மதுரையில் சீர்திருத்த திருச்சபையின் அருட்பணியை முதலில் தொடங்கியது என்பது குறிப்பிடத்தக்கது.

மதுரை பகுதியில் திருப்பணியாற்ற ABCM அருட்பணி இயக்கம் அவரை அனுப்பி வைத்தது. 1878ல் அவரது மனைவி மற்றும் அவரது ஐந்து குழந்தைகளில் முதல் குழந்தையுடன் வந்த அவர், மதுரைக்கு அருகாமையில் உள்ள மானாமதுரையில் அருட்பணியாளராக நியமிக்கப்பட்டார். ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு 1883ல், Rev. ஜோன்ஸ் மதுரைக்கு மாற்றப்பட்டார், அங்கு அவர் ஏழு ஆண்டுகளாக மதுரை மிஷனின் செயலாளராகவும், பொருளாளராகவும் பொறுப்பேற்றார். பல தேவாலயங்கள், தொடக்கப் பள்ளிகள், ஆண்கள் மற்றும் பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள், ஆண்கள் மற்றும் பெண்களுக்கான பயிற்சிப் பள்ளிகள், தொழில்துறை பள்ளிகள், ஒரு கல்லூரி, ஒரு மருத்துவமனை, ஒரு உறைவிடப்பள்ளி போன்றவற்றின் நிர்வாகியாக பணிபுரிந்தார். மதுரையில் கிறிஸ்தவ மற்றும் இந்து மத நம்பிக்கையாளர்களிடையே மோதல் ஏற்பட்டது. இந்த மோதல் இறுதியில் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப்பட்டது, அங்கு ஒரு இந்து மதகுரு 'கிறிஸ்தவர்கள் இந்துக் கடவுள்களை இழிவுபடுத்தினர்' என்று குற்றம் சாட்டினார். எவ்வாறாயினும், இந்துக் கடவுள்களை தவறாகப் பயன்படுத்தாமல் கிறிஸ்துவை மட்டுமே அறிவிக்க வேண்டும் என்று ஜோன்ஸ் ஏற்கனவே கிறிஸ்தவ போதகர்களுக்கு அறிவுறுத்தியதாக நீதிமன்ற சாட்சியம் சுட்டிக்காட்டியது. ‘கடவுள் இந்திய மக்களுடன் அவர்களின் வரலாற்றில் பல நூற்றாண்டுகளாக நேரடியாக இடைப்படுகிறார், முக்கியமான உண்மைகளுக்குள் அவர்களை வழிநடத்துகிறார் என்பதை ஏற்றுக் கொண்டு நம்ப வேண்டும்’ என்று வலியுறுத்தினார்.

பின்னர் 1890 ல் Rev. ஜோன்ஸ் பசுமலையில் உள்ள இறையியல் கல்லூரியை வழிநடத்தினார். எஞ்சிய இருபத்திரண்டு வருடங்களை இந்திய அருட்பணியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக அர்ப்பணித்தார். இங்கு பயின்ற இறையியல் கல்லூரி மாணவர்களுக்கு வகுப்பறையில் பாடம் மட்டுமல்லாது, அவர்களுடன் சேர்ந்து பல கிராமப்புற பகுதிகளில் நீண்ட, கடினமான பயணங்கள் மேற்கொண்டு அருட்பணி செய்தார். இதன் மூலம் இளம் மாணவர்கள் எவ்வாறு அருட்பணி செய்ய வேண்டும் என்பதற்கு ஒரு முன்மாதிரியாக திகழ்ந்தார். தனது முப்பத்தைந்து வருட மிஷனரி பணியின் நிறைவில், 1910 ல் எடின்பெர்க்கில் நடைபெற்ற உலக அருட்பணியினர் மாநாட்டில் பங்கு பெற்றார். இம்மாநாட்டில் அருட்பணி இயக்கங்கள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்ற கருத்தினை மீண்டும் மீண்டும் வலியுறுத்தினார். இக்கருத்து தென்னிந்திய திருச்சபை உருவாவதற்கு ஒரு அச்சாணி என்று கருதலாம்.

OUR THE YEAR BOOK OF MISSIONS IN INDIA, BURMA AND CYLON என்ற புத்தகத்தைத் தொகுத்து 1912ல்வெளியிட்டார். பின்னர் உடல்நிலை காரணமாக அமெரிக்காவிற்கு திரும்பினார். 1914ம் ஆண்டில் ஹார்ட்ஃபோர்டில் உள்ள கென்னடி மிஷன்ஸ் பள்ளியின் பேராசிரியரானார். அங்கு அவர் 1916ல் இறக்கும் வரை பணியாற்றினார். பிற சமயங்களில் காணப்படும் நன்னெறிகளை கிறிஸ்துவின் போதனைகளுக்கு உட்பட்டு இருந்தால் அவற்றினை கிறிஸ்தவர்கள் ஏற்றுக்கொள்ள முன்வர வேண்டும் என்ற கருத்தினை ஆழமாக போதித்தார். இந்த அருட்பணியாளரை நினைவுகூறும் வண்ணமாக பசுமலையில் ஒருபகுதி ஜோன்ஸ்புரம் என்று பெயரிடப்பட்டுள்ளது.

# புத்தக வெளியீடு

அபிஷேக் சாம்

கிறிஸ்து இயேசுவின் இரத்தத்தினால் சம்பாதிக்கப்பட்ட மீட்பை உலகுக்கு அறிவிக்கும் திருச்சபை அப் புண்ணிய பணியை உலகெங்கும் சென்று அறிவித்து வந்த தன் பிள்ளைகள் பலரின் இரத்தத்தைச் சிந்தி, அதின் மூலம் உலகெங்கும் பரவும் வாய்ப்பைப் பெறும் நிலையேற்பட்ட காலத்தும் அவ்வாறு இரத்தத்தைச் சிந்த எஞ்ஞான்றும் அஞ்சினதில்லை; அதின் மக்களும் தங்கள் இரத்தத்தைச் சிந்தப் பின்வாங்கினதுமில்லை.

திருச்சபை வரலாற்றிலும் இவ்வுண்மை சிறப்புடன் துலங்குகிறது. எத்தனை பேர் இரத்தச்சாட்சிகளாக மாண்டு இத்திருச்சபை வளர உதவினர் என்று திட்டமாகக் கூறவியலாது. ஆனால் அவர்களில் ஆண்களுமுண்டு, பெண்களுமுண்டு; பெரியோரும், சிறியோரும், பாலகருங்கூட உண்டு; தனவந்தருமுண்டு, ஏழைகளுமுண்டு; கற்றோருமுண்டு, கல்லாதோருமுண்டு. சிலரின் பெயர்களை அறிவோம்; பலரின் பெயர்களை அறியோம். சிலரின் 'இரத்தச்சாட்சி மரண' வரலாறறிவோம்; பலரின் விபரமறியோம்.

நமது தேவனுடைய பெரிதான கிருபையால் முதலூரின் தந்தை அருத்தொண்டன் தாவீது சுந்தரானந்தன் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் நூல் Thaveethu Suntharananathan, first martyr of Tirunelveli என்ற பெயரில் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு வெளியிடப்பட்டது. திருநெல்வேலி திருச்சபையின் முதலாம் இரத்தச்சாட்சி தாவீது சுந்தரானந்தம் என்ற இந்த நூல் 1976 ஆம் ஆண்டு தமிழில் எழுத்தப்பட்ட பின்பு கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தால் 2022 ஆம் ஆண்டு மறுபதிப்பு செய்யப்பட்டது. இந்த நூலை ஆங்கிலத்தில் கொண்டு வந்தால் இன்றைய இளம் தலைமுறை திருச்சபை மக்களும் தெரிந்து கொள்வார்கள் என்ற நோக்கத்தில் போப் கல்லூரி நிறுவனரும் முதல்வருமான டாக்டர் ஜார்ஜி முல்லர் ஐயா அவர்களின் மகள் டாக்டர் நிர்மலா தங்கராஜ் அவர்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு செய்து கொடுத்து எங்களை உற்சாகப்படுத்தினார்கள். முதலூர் சேகரத்தின் நமது உறுப்பினர் அபிஷேக் சாம் அவர்களின் முயற்சியினால் முதலூர் சேகர பொருளாளர் திரு. VSZ. சாந்தராஜா ரெத்னராஜ் திரு. சந்தோஷ் அவர்கள் மற்றும் முதலூர் சேகர மக்களின் பொருளாதார உதவியினாலும் இந்த நூலை முதலூர் சேகர குருவானவர் அருட்திரு K. செல்வன் மகாராஜா அவர்கள் ஜெபித்து வெளியிட, முதலூர் மண்ணின் மைந்தர் உயர்திரு S. டேவிட்சன் தேவாசீர்வாதம் IPS (ADGP, Tamilnadu Police) அவர்கள் பெற்றுக்கொண்டனர். இரண்டாவது பிரதியை முதலூர் சேகர பொருளாளர் திரு. VSZ. சாந்தராஜா ரெத்னராஜ் அவர்கள் வெளியிட திரு. சந்தோஷ் அவர்கள் பெற்றுக் கொண்டனர்.

இந்நூல் பராபரன் இந்நூலை இயற்றியவரையும், வெளியிட உதவியவர்களையும், இதனைப் படிப்பவர்களையும் ஆசீர்வதிப்பாராக. இந்த புத்தகத்தின் விலை ரூபாய் 50 மட்டுமே (+ தபால் செலவு). முதலூர் பகுதியில் உள்ளோர் திரு. சாந்தராஜா (9442054948) அவர்களை தொடர்பு கொள்ளவும். மற்றும் வரலாற்றுச் சங்கத்திலும், திருநெல்வேலி திருமண்டல புத்தக நிலையத்திலும் கிடைக்கும்.









# புரட்சிப்புயல் ஏமிகார்மைக்கேல்

## நெடுந்தொடர் -அத்தியாயம்-17

முனைவர் ஜான்சி பால்ராஜ்,
திருநெல்வேலி

உவாக்கர் மசூலிக்கு சென்று ஒருவாரம் முடிந்திருந்தது. இன்னும் ஒருவாரத்தில் எப்படியும் அவர் வந்துவிடுவார் என்ற எதிர்பார்ப்பில் டோனாவூர் காப்பகம் முழுவதும் இயங்கி கொண்டிருந்தது. ஏமிக்கு உவாக்கரும் அவரது மனைவியும் இல்லாதது காப்பகப் பொருப்புகள் அனைத்தும் தன் தலையின் மேல் அமர்ந்திருப்பது போன்ற உணர்வு. !

வெளியில் போஸ்ட் மேன் அழைக்கும் சத்தம் கேட்டு சிறுமி பரிமளா ஓடினாள். தினமும் எங்கிருந்தாவது காப்பகத்திற்கு வரும் அஞ்சல்களை வாங்கி வந்து ஏமியிடம் கொடுத்துவிட்டு அவர் அளிக்கும் அன்பு முத்தங்களையும் புன்னகையோடான தழுவல்களையும் பெறுவதில் சிறுமிகளிடையே போட்டி நிலவும். சில வேளைகளில் போட்டி முற்றி இழுபறிகளில் கடிதங்கள் துண்டாகிப் போவதும் உண்டு.

தாங்க. . எங்கிட்ட, நான் அம்மாகிட்ட கொடுக்கிறேன். . என்று கையை நீட்டியபடியே வாசலை நோக்கி ஓடினாள் பரிமளா. இதை உங்கிட்ட கொடுக்க முடியாதும்மா, இது தந்தி. அம்மாவை கூப்பிடு அவங்க கிட்டதான் கொடுத்தாகணும். தந்தி என்றதும் எப்பேர்பட்ட வீரனுக்கும் கதி கலங்கிவிடும். என்ன தகவல் என்று அறிந்து கொள்ளாமலே சீமைக்கு அல்லது தூர இடங்களுக்கு வேலைகளுக்காகப் போயிருக்கும் உறவுகளில் யாரோ செத்து போய்விட்டதாக எண்ணி அழுது துக்கம் கொண்டாடி. . . பிறகு அது தவறான செய்தி என்று அறிந்து கொண்ட நிகழ்வுகளும் அவ்வப்போது சமூகத்தில் ஆங்காங்கே நடப்பதுண்டு.

தந்தியா என்னாச்சு, பர்தாவுக்கு அல்லது அம்மாவுக்கு ஏதாவது ஆகிவிட்டதோ. . . இல்லையில்லை, இருக்காது மனதிற்குள் நொடிநேரத்தில் முளைத்தெழுந்த அச்ச எண்ணங்களை வலிந்து நிராகரித்துவிட்டு வேகமாக வந்து, என்ன தந்தியது. . . என்றார் ஏமி.

அது ஒன்னுமில்லமா. . . மசூதியிலிருந்து வந்திருக்கு என்றவர் நீட்டினார். என்னது. . . அண்ணனிடமிருந்தா என்ற ஏமியின் விரல்கள் சட்டென நடுங்கியது. நெற்றி சுருங்க உற்று நோக்கி வாசித்தார்.

உவாக்கர் கவலைக்கிடம் என்று அச்சாகியிருந்தது.

தந்தி என்றதும் ஏமியின் பின்னாலேயே வந்த பொன்னம்மாளும் தேவாயும். . . என்னம்மா, என்ன விசயமாம் என்று கேட்க, உவாக்கர் அண்ணாச்சி சுகவீனமாக இருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது என்ற ஏமியின் முகம் வியர்த்து விரல்கள் நடுங்கியதைப் பார்த்ததும் எல்லோர் கண்களும் கலங்கி நின்றது.



சரி சரி. . . இல்ல. . . ஒன்றுமில்ல வாங்க நாம் எல்லோரும் போய் அண்ணாச்சுக்காக ஜெபிப்போம். எல்லாம் சரியாகி விடும். . . பயப்படாதீங்க, என்ற ஏமியின் குரலில் தளர்வு தெரிய நடையில் கால்களும் தடுமாறின. சில நிமிடங்களில் காப்பகம் முழுவதும் பரபரப்பு. குழந்தைகளைத் தவிர அனைவரும் ஜெபம் செய்வதற்காக ஏமியின் அறையில் கூடினர். கையில் வைத்திருந்த தந்தித்தாளை தனது பைபிளின் மீது வைத்தார். அனைவரும் முழங்காலில் நிற்க, பொன்னம்மாள் சத்தமாக வேண்டுதல் செய்தார். அனைவரும் சோகமே உருவாக அழுகையோடு மனதிற்குள் வேண்டுதல் செய்தனர்.

ஏமி ததும்பும் கண் நீரலைகளைச் சிதறிவிடாமல் அடக்கியபடி முழங்காலில் நின்று வானத்தை நோக்கி முகத்தை வைத்திருந்தார். உதடுகள் எதையோ முணுமுணுத்தன. பிறகு நம்பிக்கை ஊட்டும் வார்த்தைகளைக் கூறி அனைவரையும் அவரவர் அறைகளுக்குச் செல்லுமாறு அனுப்பி வைத்தார்.

இரவில், சென்னையில் இருந்த தனது சட்ட ஆலோசகரான வக்கீல் சோமசுந்தரத்தோடு தொலைப்பேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

மிஸ் ஏமி, அங்கு இருந்து கிளம்பும் போது நலமாக இருந்தவர் திடீரென சுகவீனமடைந்திருக்கிறார் என்றால் கண்டிப்பாகத் தொற்று நோயான விஷ பேதியின் தாக்கமாகத் தான் இருக்க வேண்டும். நாடு முழுவதும் தொற்று அதிகரித்துக் கொண்டிருக்கிறது. நான் முடிந்தவரை விசாரித்து நாளைக்குள் பதில் அளிக்கிறேன். கவலைப்பட வேண்டாம் என்றார். திகில் பற்றிக் கொண்டது ஏமிக்கு. செய்வதறியாமல் கலங்கி நின்றார். செய்தி பர்தாவிற்கு தெரிந்திருக்குமா. . . ? ஒன்றும் புரியவில்லை. இங்கிருந்து மசூலிக்குப்போக வாய்ப்பிருக்குமா? எப்படி போவது. . . மனம் வேதனையில் ஏதேதோ எண்ணி அலுத்தது. பொன்னம்மாள் வந்தாள். அம்மா, கடவுள் மீது நம்பிக்கை வைத்து தூங்குவோம். மணி ஒன்றாகி விட்டது. எழுந்திருங்கள் அம்மா.

நீ போய் படுத்துக்கொள். நான் பிறகு வருகிறேன். வேறு ஏதாவது வழி உண்டா என்று பார்க்கிறேன். நாளை நானே மசூலிக்கு கிளம்பி போய் அண்ணனை அழைத்து வந்து விடலாமா என்று தோன்றுகிறது. அய்யோ. . . அதெல்லாம் வேண்டாம். அது இன்னும் நிலமையை மோசமாக்கும். நீங்க இப்போ தூங்க வாங்க.

காலையில் யோசித்து ஒரு முடிவிற்கு வருவோம் என்ற பொன்னம்மாள், ஏமியின் தோளை அணைத்து இழுத்தாள். ஏமி சோர்ந்த மனதோடு எழுந்து நடந்தார். யாருக்காகவும் எதற்காகவும் கலங்காத காலச் சக்கரம் மட்டும் அதே வேகத்தில் ஓடிக் கொண்டிருந்தது. இரவெல்லாம் சாரலாய் பெய்து கொண்டிருந்த வானம் இரவை விடிய விடாமல் பெருமழையாய் அடித்துப் பெய்தது. இருளின் அடர்வை குறைக்க முயன்ற சூரியன் தோற்றுக் கொண்டிருந்தது.

காலை பத்து மணி. . . . நேற்று வந்த அதே அஞ்சலகப் பணியாள் வந்து நின்றார். ஏமி சன்னல் வழியே பார்த்தார். ஒரு வினாடியில் முழு இரத்தமும் உறைந்துபோன உணர்வில் இதயம் நின்று துடித்த சத்தம் இரு செவுப்பறைகளையும் அடைத்தது. அந்த மனிதன் அம்மா. . . என்ற பம்மிய குரலால் ஏமியின் அதிர்ச்சியைக் கலைத்தான். அவனது முகம் வெளிரியிருந்தது. சத்தம் சோகத்தால் தோய்ந்திருந்தது. அவனது பார்வை ஏமியின் விழிகளை சந்திக்க சக்தியற்று தாழ்ந்திருந்தது. ஏமி கேள்வித் தொடுத்தப் பார்வையோடு அவன் நீட்டிய தந்தியை பார்த்தார், அதில் உவாக்கர் விஷபேதியால் இறந்துவிட்டார் என்றிருந்தது. அந்த மனிதன் ஏமியிடம் எதையும் பேச இயலாமல் சில வினாடிகள் அந்த வாசலிலேயே நின்றிருந்தார்.

ஏமி செய்வதறியாமல் ஆலயம் இருந்த திசைப்பக்கம் திரும்பி நின்றார். கையிலிருந்த தந்தி காற்றில் பறந்தது. . . சில நிமிடங்களில் அனைவரும் அழுது, புலம்பி கொண்டிருந்த சத்தம் கேட்டு மயக்கம் தெளிய விழித்து எழுந்து அமர்ந்தார். நடந்ததை திரும்ப நினைவிற்கு கொண்டுவர சில வினாடிகளானது. தகவல் சில மணி நேரங்களுக்குள் சுற்று வட்டாரங்களில் பரவியது. மக்கள் பெருந்திரளாகக் கூடி டோனாவூரை நோக்கி அழுது கொண்டே வந்தனர்.

திருநெல்வேலி திருமண்டலத்தில் பெரும் ஒழுங்கு நடவடிக்கைகள் எடுத்து கிறித்தவ சித்தாந்த நெறிமுறைகளைக் கடைபிடிக்க வலியுறுத்திய மாபெரும் பரிசுத்தவானின் மரணம் நெல்லை மாவட்டம் முழுவதையும் வேதனையில் ஆழ்த்தியது. அனைவராலும்விரும்பப்பட்ட அவரது பண்பு மற்றும் புரட்சிகரமான அவரது மனப்பான்மையின் எதிரொலியாக அவரது பேச்சாற்றல்



கிறித்தவர்களையும் தாண்டி சாதி, சமய வேறுபாடுகளின்றி அனைவராலும் கவனிக்கப்பட்டிருந்தது. தமிழில் அவருக்கிருந்த புலமையும் அவரது சமூகம் சாரந்த கண்ணோட்டமும் மக்களுக்கு அவர்மீது அன்பை ஏற்படுத்தியிருந்தது. குறிப்பாகத் தமிழ் ஆர்வலர்கள் ஆங்கிலேயரான அவரது தமிழ் மொழி ஆற்றலை வியந்து பேசினர்.

கேரளா, ஆந்திரா, கர்நாடகா. . . போன்ற அண்டை மாநிலங்களிலும் உவாக்கரின் பெயர் அறியப்பட்டதாக இருந்தது. திடீரென வந்த அவரது மரணச் செய்தி கிரகிக்க முடியாமல் வதந்தியெனவும் பேசப்பட்டு வந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக உவாக்கரின் மரணம் காப்பகத்தின் பிஞ்சு குழந்தைகளின் உள்ளத்தை பரிதவிப்பிற்குள்ளாக்கியது. அப்பா. . . அப்பா. . . என்று கூப்பிட்டு அழுத அந்த மழலைகளின் சத்தம் அங்கிருந்த அனைவரையும் கலங்கடித்து கண்ணீர் வடிக்க வைத்தது. கடைசியாக ஒருமுறை அவரது முகத்தைப் பார்க்க விரும்பி மக்கள் டோனாவூரில் கூடி வந்தனர். ஆனால் விஷ பேதியான நோய்த் தொற்றால்

இறந்த உவாக்கரின் உடல் டோனாவூருக்கு கொண்டு வரப்படவில்லை.

டோனாவூர் தேவாலயத்தில் துக்கம் அனுசரிக்கும் விதமாக துக்க மணி ஒலித்துக் கொண்டிருந்தது. டோனாவூர் சேகர சபைகளில் உபதேசிகர்களாக இருந்தவர்களும் அச்சபையினரும் பொதுமக்களும் பெரும் வேதனையோடு ஆலய வளாகத்திற்குள்ளும் வெளியிலுமாக நின்றிருந்தனர். ஏமியும் அவரது தோழியரும் நடக்கப் பழகிய குழந்தைகள் முதல் நடக்க வலுவிழந்த முதியோரும் சிறு பட்டாளம் போல் காப்பகத்திலிருந்து ஆலயத்தை நோக்கி நடந்து வந்தனர்.

ஏமியின் முகம் கற்பாறையைப்போல் இறுகியிருந்தது. பற்றிக்கொள்ள இருந்த ஒரே ஒரு கோலும் உடைந்துவிழ. . . கோடையின் உச்சிவெயிலில் நீரின்றி தளர்ந்து பொசுங்கும் பசுங்கொடியின் நுனியிலைகளைப்போல் அவரது முகம் சுருங்கிபோயிருந்தது. அவர்களைப் பார்த்ததும் அங்கிருந்த மக்களின் அழுகுரல் அந்த இடம் அசையுமளவு அதிகரித்தது.

மறைத்து வைத்திருந்த துக்கம் தானாய் கலைந்தோட விம்மினார் ஏமியும். தன் துக்கம் மக்களை தாக்கிவிடக் கூடாதென்று ஆலய வாசலுக்கு வந்ததும் தலை கவிழ்ந்து நின்றார். ஆனால் கண்ணீர் மட்டும் அடங்கி கொள்ள முடியாமல் அணையுடைந்து தரையில் விழுந்து கொண்டேயிருந்தது.

பிஞ்சு குழந்தைகள் அப்பா. . . அப்பா. . . சீக்கிரம் வந்திடுவேன்னு சொன்னியே. . . என்று ஏங்கி ஏங்கியழுத அந்தக் காட்சி வேதனையின் உச்சம். கண்ணீராலும் கதறலின் சத்தத்தாலும் ஆலயம் நிறைந்திருக்க. . . ஏமி தனது மொத்த துயரத்தையும் தேவாலயத்திற்குள்ளேயே புதைத்துக் கொண்டிருந்தார். முகத்தில் கண்ணீர் வடிய வடிய அவரது கண்கள் இமைக்காமல் ஆலய கருவறையையே பார்த்துக்கொண்டிருந்தது.

சற்றுநேரத்தில், இதுவரை கடவுள் என் வாழ்வில் எந்த தவறும் செய்ததே இல்லை. இதுவும் அப்படித்தான். என்று அவர் உதடுகள் விடுபட்டு முணுமுணுத்தன. சற்று மக்களின் குமுறலின் சத்தம் அடங்கவும், அடக்க ஆராதனையை மூத்த உபதேசியார் ஒருவர் நடத்தினார்.

திருநெல்வேலி திருமண்டலத்தின் கதீற்றல் பேராலயத்தில் உவாக்கருக்கான துக்க ஆராதனை கூடுகை நடத்தப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. அதில் திருமண்டலம் முழுவதிலும் பணி செய்துவந்த பெரும்பாலான குருக்களும் தேவாலய பணியாளர்களும் ஒன்று கூடி தங்கள் இறுதி அஞ்சலியை செலுத்தினர். உவாக்கரின் இறப்பு பெரும் வேதனையையும் கூக்குரலையும் ஏற்படுத்தியிருக்க. இன்னொரு பக்கம் தேவதாசியர் வாழும் கோவில்களுக்கும் இந்தச் செய்தி பரவி அதிர்ச்சியோடு இனம் புரியாத மகிழ்ச்சியையும் அவர்களுக்குள் ஏற்படுத்தியிருந்தது.

பெருங்கோயில் தலைமை பூசாரி சொன்னான், கேட்டேளா ஓய். . . பகவான் இந்தக் கொடுமையெல்லாம் பார்த்துட்டு சும்மா இருப்பாரா? அந்த வெள்ளைக்காரி இருக்காளே அவள். . . செத்துப்போனானே அந்த வாக்கர் இருந்த திமிரில் தான் துணிகரமா இந்தப் பாவத்தையெல்லாம் செய்துண்டிருந்தா. . . . ஊர் ஊரா அலைஞ்சி கோவிலுக்கு பொம்மனாட்டிகளை தாசியரா கொடுக்க விடாம தடுத்திண்டிருந்தா. இதெல்லாம் தெய்வ குத்தமுன்னு தெரியாதா அவளுக்கு. இப்படியே போனா இன்னும் பத்து வருசத்துல குமரிகள் நடமாட்டமே நம்ம கோவிலுக்குள் இராது. பூரா வெள்ள கொண்டை முடிந்துட்டலையும் கிழவியள்தான் ஆங்காங்கே ஊர்ந்திட்டு அலைவா. இப்ப இருந்துண்டிருக்கும் பொண்ணுகளோடு எல்லாம் முடிந்திடும். . . என்றான் தூர தரிசனத்தோடு.

அதான் ஆண்டவனா பார்த்து ஆப்பு வச்சுட்டானே. இனி எல்லாத்தையும் இழுத்து மூடிட்டு அவாள் இருந்த நாட்டுக்கே ஓடிருவா பாரும். நமக்கு ஒரு பெருந்தொல்லை இன்றோடு ஒஞ்சது. என்றான் நாதசுரத்தை சீரமைத்துக் கொண்டிருந்த வெள்ளை சட்டைக் காரன்.

சரி, அவள் போயிருவா. பிறகு அங்க வளருத சிறியவாள் பெரியவாளான பொம்மநாட்டிகளல்லாம் என்ன பண்ணுவா ஓய்!? உமக்கு ஏதும் அபிப்ராயம் இருந்தா சொல்லுமேன் என்றான் குடுமியை ஆட்டியபடி தலையை சொரிந்து கொண்டிருந்த ஒருவன். அதுகளையெல்லாம் நம்ம ஆலயத்துக்கு திரும்ப எடுத்துட வேண்டியதுதான். . . அதே நாதசுவர குசும்பன் நக்கலாக இழுக்க ஒன்றிரண்டு சிரிப்பு சத்தம் !

எதுக்கு இங்க அதுகள்ளாம்? இது குடுமிக்காரன். தட்டுமுட்டு வேலைகள் செய்ய வைக்க தான். . . என்று இழித்தான் இன்னொருவன். செத்த வாயை மூடும் ஓய். என்ன சாதி சமூகமுன்னே தெரியாம எல்லாத்தையும் வாரி போட்டு வளர்த்திட்டிருக்கா அந்த வெள்ளக்காரி. அதுகளையா இங்க கொண்டுவர்ரது. . . அபச்சாரம் அபச்சாரம். . . கழுவும் உம்ம வாயை. ஒரே சிரிப்பு. . . . !!

**தொடரும்.**

# கள ஆய்வு

இரயில் ரவி



7.7.1820 ஆம் ஆண்டு பாளையங்கோட்டைக்கு வந்து சேர்ந்த கனம் சி.டி.ஈ. இரேனியஸ் அவர்கள் 15 ஆண்டு காலங்களாக நம்முடைய திருநெல்வேலி மாவட்டத்தை மையமாக கொண்டு திருநெல்வேலி, தற்போதைய தூத்துக்குடி நாசரேத் திருமண்டலங்களிலேயே பணி செய்து 371 சபைகளை உருவாக்கியதாக நமக்கு உறுதியான வரலாறு கூறுகிறது.

அதுமாத்திரம் அல்லாமல் 5 ஆண்டுகளிலேயே 107 பள்ளிகளை நிறுவி பிள்ளைகள் கற்கும்படியாக ஐயர் அவர்கள் செய்த காரியமும் நமக்கு தெரியாமல் இல்லை. இருந்த போதிலும் ஐயர் அவர்கள் நம்முடைய முதல் ஆலயமாக பாளை கத்தீட்ரல் பேராலயத்தை கட்டினார். அதே ஆண்டிலே திருப்புளியங்குடியிலேயே ஒரு ஆலத்தையும் அவர் கட்டினார். ஐயர் அவர்கள் உருவாக்கிய முதல் இந்த இரண்டு சபைகளும் இந்த ஆண்டிலிருந்து அதாவது 2023 ஆம் ஆண்டிலிருந்து தங்களுடைய 200 வது நூற்றாண்டை கொண்டாடிக் கொண்டு இருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு காலகட்டத்திலே 200 ஆண்டுகளாக பல வரலாறுகள், தேய்ந்தும், மறைந்தும் போன நிலையிலேயே இவைகளை கள ஆய்வு செய்து ஏதாவது ஒரு குறிப்பு கிடைக்குமா என்ற ஆதங்கத்தோடு நம்முடைய கிறிஸ்துவ சங்கத்தின் உறுப்பினராக சகோதரர் மன்னா செல்வகுமார் மற்றும் திருமண்டல சாம்பவர் வடகரை சேகர குரு அருட்திரு.A. ஜெபரத்தினம் அவர்களும், இரயில் ரவி ஆகிய நானும் திருப் புளியங்குடியிலேயே கள ஆய்வு செய்தோம். அந்த கள ஆய்விலே கிடைத்த சில தகவல்களை உங்களோடு பகிர்ந்து கொள்வதுதான் இந்த படைப்பின் நோக்கம்.




அநேக ஆண்டுகளாக வரலாறு மறைந்து, தேய்ந்து பல இடங்களில் இல்லாமலே போய்விட்டது. கிறிஸ்துதாஸ் ஐயர் போன்ற மனிதர்கள் இல்லையென்றால் இன்று நாம் நம்முடைய வரலாறுகளை முற்றிலுமாக தொலைத்து நிற்போம். ஆனாலும் இந்த காலகட்டத்திலும் நமக்கு பல சுவையான தகவல்கள் நம்முடைய கள ஆய்விலேயே கிடைத்திருப்பது என்பது மிக ஆச்சரியத்தையும், பரவசத்தையும் உண்டாக்குகிறது.

28.9.2023 வியாழன் மாலை 6.00 மணிக்கு திருப் புளியங்குடியிலேயே தூத்துக்குடி நாசரேத் திருமண்டல சார்பாக அந்த ஆலயத்தின் 200வது ஆண்டு சிறப்பு விழா அழைப்பு பெற்று அந்த விழாவில் கலந்து கொள்ளவும், கள ஆய்வு செய்யவும் நாங்கள் குழுவாக கிளம்பி சென்றோம். அந்த விழாவில் அந்த ஆலயத்தை மங்கள படைப்பு செய்யும்படியாக டாக்டர் பேரருள் திரு. டி. ஜெயசிங் பிரின்ஸ் பிராபாகரன் அவர்களும் ஈ.சி.ஐ. திருச்சபையின் பேராயர் டேவிட் ஒநேசிமு அவர்களும் வருவதாக கேள்விப்பட்டு மகிழ்ச்சியோடு நாங்கள் அந்த பட்டணத்திற்குள் பிரவேசித்தோம்.

அந்த பட்டணத்திற்கு நாங்கள் சென்ற போது மிகுந்த

மின் ஒளியால் அந்தப் பட்டணம் மின்னிக் கொண்டிருந்தது. அந்த சிறிய கிராமத்தில்தான் எத்தனை மகிழ்ச்சி, எத்தனை கொண்டாட்டம். அந்த ஊருக்குள்ளாக நாங்கள் நுழைந்தபோது அங்கு நின்ற ஆடி கார்களும், பல உயர்தர கார்களும் எங்களை பெரிய அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இந்த சிறிய கிராமத்தில் இருந்தா இத்தனை பெரிய மகிழ்ச்சி, பெரிய சந்தோஷத்தோடு அந்த பட்டணத்திற்குள்ளாக நாங்கள் கடந்து சென்றோம். கிட்டத்தட்ட 200 வீடுகள் மாத்திரமே இருந்திருக்கின்றன, அதிலும் அநேக வீடுகளில் உள்ளவர்கள் வெளி நாடுகளிலும், வெளி ஊர்களிலும் சென்று பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். அந்த ஊருக்கு நாங்கள் சென்றபோது மிக உற்சாகமாக அந்த சபையார் எங்களை வரவேற்றார்கள். எங்களது விருப்பத்தை நாங்கள் அவர்களுக்கு தெரிவித்தபோது அவர்கள் மனமுவந்து எங்களுக்கு சில ஆலோசனைகளை கொடுத்தார்கள். அங்கு செய்த கள ஆய்வுகளை இனி காண்போம்.

தாரை தப்பட்டங்கள் முழங்க மிக பிரமாண்டமான வரவேற்பு ஒன்று அங்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அதன் நடுவிலே கடந்து சென்ற நாம் அந்த பழைய ஆலயத்தின் முன்பாக புதிதாக நீட்டிப்பு செய்திருந்த மண்டபம் கண்டோம், மிகுந்த மகிழ்ச்சி அடைந்தோம். முழுவதும் கட்டி முடித்து மேலும் சில சில காரியங்களை அந்த திருச்சபையார் மிக பரப்பரப்பாக செய்து கொண்டிருந்தனர். அதை கழுவி சுத்தம் செய்வது மற்றும் அலங்காரங்கள் செய்வது என்று அந்த திருச்சபையார் மிக பரப்பரப்பாக இருந்தார்கள். நாம் எதிர்பார்த்திருந்தபடியே மாலை 6.00 மணிக்கு பேரருள்திரு டாக்டர் டி. ஜெயசிங் பிரின்ஸ் பிராபாகர், மதுரை திருமண்டலம் அவர்களும், டேவிட் ஒநேசிமு சென்னை ஈ.சி.ஐ. பேராலாய பேராயர் அவர்களும் அந்த சேகரத்தின் தலைவர் அருட்திரு. அருமைதுரை அவர்களும் அந்த ஆலயத்திற்குள் பிரவேசிக்க மிகுந்த ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார்கள். அவர்கள் உள்ளே வந்த சில நொடிகளிலேயே அந்த ஆலயம் மங்கள படைப்பு செய்யப்பட்டு, ஆசீர்வதிக்கப்பட்டு ஒரு சிறிய ஆராதனையாக அங்கு நடந்தது. அந்த ஆராதனையிலேயே நம்முடைய வரலாற்று சங்கத்தின் விருப்பதிற்கு இணங்க பேராயர் ஜெயசிங் அவர்கள் நம்முடைய சாத்தான்குளம் வரலாறு என்கிற புத்தகத்தை பிரதிஷ்டை செய்து பேராயர் டேவிட் ஒநேசிமு அவர்களுக்கு வழங்கினார்கள். அதுமட்டுமல்ல ஏற்கனவே நாம் வெளியிட நம்பி அம்மாள் வரலாற்று புஸ்தகமும் அந்த மேடையிலே கௌரவிக்கப்பட்டு அநேகருக்கு வழங்கப்பட்டது. அந்த புஸ்தகம் அந்த இடத்திலேயே அப்படி செய்யப்பட்டது மிகுந்த சிறப்பு. அந்த நிகழ்ச்சி முடிவதற்கு முன்பதாக நாங்கள் அங்கு சென்றியிருந்தபடியால் அந்த நிகழ்ச்சி துவங்குவதற்கு முன்பதாக அங்குள்ள வீதிகளிலேயே சுற்றி அலைந்து வந்தோம்.

அந்த ஊரிலே பலர் பல ஆதாரங்களை கொடுத்தாலும், ஆபிரகாம் ஐயா என்பவருடைய மகன் பரமானந்தம் ஐயா என்பவருடைய மகன் மதுரையை சேர்ந்த திரு. கோயில்பிள்ளை அவர்கள் பல ஆலோசனைகளை கொடுத்தார்கள். அவர்களின்









ஆலோசனையின் கீழ் நாங்கள் அந்த ஊரின் பல பகுதிகளையும் சுற்றி வர கர்த்தர் நமக்கு கிருபை செய்தார். அவ்வாறு சென்ற போதுதான் அந்த பட்டணத்திலே நம்பி அம்மாள் அவர்கள் வாழ்ந்த காலத்தில் குடி தண்ணீர் கொடுக்காமல் கிணற்றில் அடித்து விரட்டிய அந்த கிணறை நாங்கள் பார்த்தோம். அந்த கிணறு இன்று பாழடைந்து அதன் மேல் நம்முடைய நவீன கால பைப்கள் போடப்பட்டிருந்தன, தண்ணீர் தொட்டிகள் நிறுவப்பட்டிருந்தன, அதுவும் இன்று பயன்பாட்டில் இருப்பதாக தெரியவில்லை. அந்தப் பகுதிகளுக்கு சென்ற போது மிகவும் பரவசம் அடைந்தோம். நம்முடைய திருச்சபையின் முதல் பெண் இரத்த சாட்சி இந்த இடத்திலேயே ஆண்டவருக்காக அடி வாங்கி கீழே விழுந்த இடத்தில் உண்மையாக தேவனுக்கு நன்றி செலுத்தினோம். அதை தொடர்ந்து அந்த ஊர்களில் அந்த அம்மையார் ஒரு கடையில் இருந்து விரட்டி அடிக்கப்பட்டதாக வரலாறு இருக்கிறது. அந்த கடை எங்கே இருக்கிறது என்று நாங்கள் சுற்றி தேடிப்பார்த்தோம். இப்பொழுது அப்படி அந்த கடை இருந்தற்கான தடயமே இல்லை. சொல்லப்போனால் அந்த கடை முற்றிலுமாக மாறி இருந்தது. ஆதி காலத்தில் இருந்து ஓலை கூரைகளும், ஓலை வீடுகளும் மங்கி இன்று நாகரீகம் பெற்ற புது வீடுகளாக, மாடி கட்டிடங்களாக எழும்பி இருந்தபடியாலே திருப் புளியங்குடி நகரம் முற்றிலும் ஒரு புதிய நகரமாக காட்சி அளித்தது.

அதை தொடர்ந்து நாங்கள் ஒவ்வொரு பகுதியாக சுற்றி வந்தபோது அங்கே எங்களுக்கு பல அதிர்ச்சி தகவல் காத்திருந்தன. கோயில்பிள்ளை ஐயா அவர்கள் ஒரு காரியத்தை குறிப்பிட்டார்கள். அதாவது, நாகர்கோவில் பகுதியில் இருந்து ஒரு 90 நாடார் இன மக்கள் அந்த கால கட்டங்களிலேயே திருப்புளியங்குடியில் வந்து 200 ஆண்டுகளுக்கு முன்பாக அந்த ஊரின் பின் பகுதியிலேயே குடிபெயர்ந்து வந்து அங்குள்ள பனைகளில் ஏறி பனை பொருட்களை இறக்கி கொடுப்பதிலும் ஒத்தாசையாக இருந்து இருக்கிறார்கள். அப்படியாக வந்த 90 குடும்பங்களும் அங்கே வீடுகளை கட்டி அங்கே குடி இருந்து இருக்கிறார்கள். இப்பொழுது உள்ள காலகட்டத்திலே அவர்களின் உறவு முறைகளோ, அவர்களின் வீடுகளோ இல்லை அவர்கள் வாழ்ந்த பகுதிகளை சென்று பார்த்த போது அந்த வீடுகள் நாகர்கோவிலில் உள்ள சில கட்டமைப்புகளை பார்க்க முடிந்தது. குறிப்பிட்டு சொல்லப்போனால் அங்கிருந்த ஒரு ஆலயம் நம்முடைய நாகர்கோவிலில் உள்ள ஐயா வழி ஆலயத்தின் வடிவிலேயே கட்டப்பட்டிருந்தது. அந்த ஆலயத்தின் கம்பிகளுக்கு நடுவே உற்றுப்பார்த்த போது அது ஒரு கிராமத்தின் பெண் தெய்வத்தின் ஆலயமாக இருந்தது. உள்ளே இருந்த அந்த பெண் தெய்வத்திற்கும் அந்த ஆலயத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை. அது நாகர்கோவில் கட்டிட கலையில் கட்டப்பட்டிருந்தது. ஒரு சில காரியங்களை வைத்து நாங்கள் உறுதி செய்தபொழுது அந்த ஐயா கூறிய தகவல்கள் மேலும் பல அதிர்ச்சியை உண்டாக்கியது. அந்தக் காலக்கட்டத்தில் இங்கு வந்து சேர்ந்த அந்த 90 நாடார் இன மக்களும் அந்த திருப் புளியங்குடியிலேயே தங்கி வந்த மக்களும் ஒருவரோடு ஒருவர் கலந்து ஒரு புதிய சந்ததி அந்தப்










பகுதியில் உருவாக்கப்பட்டது. எந்த மாற்றம் இல்லாமல் அந்த பகுதியிலே இருவரும் மிகுந்த அந்நியோநியமாக இருந்து இருக்கிறார்கள். இரண்டு ஜாதியினருக்கும் எந்த வித பிரிவும் இல்லாமல் ஒரு குடும்பமாக வாழ்ந்து வருகிறார்கள். அவர் கூறும் போது நம்முடைய திருநெல்வேலி நகரத்தில் ‘ஏ என்ற எழுத்தில் ஆரம்பிக்கிற ஒரு பிரபல பஸ் கம்பெனி நிறுவனத்தாருக்கு அந்த ஊரிலே இன்னும் நிறைய உறவினர்கள் இருப்பதாக குறிப்பிட்டார். அதுமட்டுமல்ல அந்த ஊரிலிருந்து வெளியே கடந்து சென்று வாழ்கிற இவர்களும் தங்களை நாடார் இன மக்களாகவே வெளி காட்டுகிறார்கள் என குறிப்பிட்டார். இந்த ஊரிலிருந்து வெளியே சென்றவர்கள் அநேகர் கடைகள் வைத்து வியாபாரம் செய்து வருகிறார்கள். அதுமாத்திரம் அல்ல அவர்கள் அநேகர் இன்னும் தங்களுடைய பூர்வீக ஊரிலே தொடர்பில் இருக்கிறார்கள். சிலர் அந்த ஊரைச் சேர்ந்தவர் என்று சொல்வதை விரும்பாததால் அவர்கள் வேறு போர்வையிலேயே வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள்.



எங்களுக்கு வந்த ஐயப்பாடு என்னவென்றால் ஒரு வேளை நம்பி அம்மாள் என்று கருதப்படுகிற முதல் பெண் இரத்தசாட்சி ஒரு நாடார் இன கலப்பு ஜாதினராக இருப்பாரா என்று ஒரு ஐயப்பாடு தோன்றியது. இருந்தாலும் அது வரலாற்றில் எந்த பகுதியிலுமே சிறப்பாக பதிவு செய்யப்படாமல் அந்த அம்மையார் பெயர் மறைந்து விட்டது. மொத்தத்தில் கூறப்போனால் நம்பி அம்மாள் என்பது அவருடைய பெயர் கிடையாது. நம்பி என்பது அவளுடைய கணவரின் பெயர் அவருடைய மனைவி என்பதினால் அவரை நம்பி அம்மாள் என்று அழைத்துள்ளனர். அந்தக் காலகட்டத்தில் இருந்த ஒரு கலப்பு திருமண நிகழ்ச்சியினாலே இப்படி ஒரு சந்ததி உருவாகி இருக்க வாய்ப்புகள் இருக்கிறது. அப்படியாக உருவாகி அதற்கு பிறகு வருகிற காலகட்டங்களிலே தங்களுடைய ஜாதியை வெளியே சொல்ல முடியாமல் அப்படியாக கடந்து வந்ததிலே இந்த வரலாறு தேய்ந்து இருக்கலாம் எனும் ஒரு எண்ணம் மேல் ஓங்கியது. இன்னும் திருப்புளியங்குடி சபையார் அந்த அம்மையாரை கனப்படுத்தி, மகிமைப்படுத்தி வருகிறார்கள். அது நமக்கு ஒரு பெரிய சவாலாகவும் இருக்கிறது. திருப் புளியங்குடி நம்பி அம்மாள் வாழ்க்கை வரலாறு நமக்கு பெரிய ஒரு ஆர்வத்தை உண்டாக்கியது மட்டும் அல்லாமல் அங்கு சென்றிருந்த போது பார்த்த காரியங்கள், பேசிய காரியங்கள் இன்னும் அநேக தகவல்களை நமக்கு கொடுத்தன. பல அதிர்ச்சி தகவல்கள் இன்னும் அங்கு மறைந்து கிடக்கின்றன. இப்படியாக ஒவ்வொரு பட்டணத்திற்கும் போகும் போதும் இனி வரும் காலங்களிலாவது மறைந்து போன வரலாற்றை மீட்டுக் கொண்டுவருவது கொஞ்சம் சாத்தியம் என்று தோன்றுகிறது. கள ஆய்விலேயே நாங்கள் கண்ட காரியங்கள் மெய்யாகவே எங்களுக்கு பெரிய மகிழ்ச்சியை உண்டாக்கியது. நீங்களும் உங்களுக்கு நேரம் கிடைக்குமானால் திருப் புளியங்குடி கிராமத்தை ஒரு வலம் வருவீர்களானால் நிச்சயமாகவே நீங்கள் புத்துணர்ச்சி பெறுவீர்கள். எத்தனையோ இடங்களுக்கு பயணம் செல்லுகிறோம் இந்த திருப் புளியங்குடியிலே முதல் பெண் இரத்த சாட்சி அவர்கள் ஊரில் சென்று அதை தெரிந்து கொள்வது நம்முடைய விசுவாச வாழ்க்கையை இன்னும் உறுதிப்படுத்தும்.

மிகுந்த மன நிறைவோடு, மிகுந்த மகிழ்ச்சியோடு வரலாற்று சங்க குழுவினராக அங்கிருந்து பிரிந்து வந்தோம். இனி வரும் காலங்களிலே இரேனியஸ் ஐயா தட்டி எழுப்பிய திருச்சபைகளின் ஒவ்வொரு காரியங்களையும் கள ஆய்வு செய்ய தீர்மானித்திருக்கிறோம். விரும்பினால் நீங்களும் எங்களோடு இணைந்து கொள்ளலாம்.

# புலவன்குடியிருப்பு திருச்சபை வரலாறு

ஜா. ஜான் ஞானராஜ்
கல்லிடைக்குறிச்சி



திருநெல்வேலி மாவட்டத்தின் தென்மேற்கு பகுதியில் திருநெல்வேலியில் இருந்து தென்மேற்கே சுமார் 28 கிலோமீட்டர் தொலைவில் மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் புலவன்குடியிருப்பு கிராமம் அமைந்துள்ளது. நாகர்கோவிலில் இருந்து பாபநாசம் செல்லும் மாநில நெடுஞ்சாலையில் களக்காட்டிற்கும் சேரன்மகாதேவிக்கும் மத்தியில் இக்கிராமம் உள்ளது. இக்கிராமத்திற்கு அருகில் மேற்கு தொடர்ச்சி மலையில் இருந்து யானைகள் செல்லும் வழித்தடம் உள்ளதால் இக்கிராமத்தில் இருந்து மேற்கு தொடர்ச்சி மலைக்கு செல்லும் வழியில் உள்ள வேளாண்மை நிலங்கள் யானைகளால் பாதிக்கப்படுகின்றன.

## பெயர் காரணம்

இன்றைய கன்னியாகுமரி மாவட்டம் அக்காலத்தில் தென் திருவாங்கூர் சமஸ்தானம் என்று அழைக்கப்பட்டது. 1810 முதல் 1860 வரையிலான காலகட்டத்தில் அங்கு பெரும்பான்மையாக வசித்து வந்த நாடார் சமூகத்தினர் நம்பூதிரி பிராமணர், நாயர், கிருஷ்ண வகையறா எனும் குருப் மற்றும் நாஞ்சில் நாட்டு வெள்ளாளர் ஆகிய ஆதிக்க சமூகத்தவர்களாலும் ஆதிக்க சமூகத்தவரின் தூண்டுதலின் பேரில் அப்போதைய தென்திருவாங்கூர் ஆட்சியாளர்களாலும் கடுமையாக ஒடுக்கப்பட்டார்கள்.

இதன் காரணமாக அநேக குடும்பத்தினர் அப்பகுதியில் இருந்து குழுவாக வெளியேறி தமிழ்நாட்டிற்குள் குடியேறினர். இவ்வாறு குடியேற்றங்கள் நடைபெற்று வந்தபோது சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பாக தென் திருவாங்கூர் சமஸ்தானம் நாகர்கோவில் வட்டாரத்தில் இருந்து தற்போதைய புலவன் குடியிருப்பு உள்ள இடத்தில் நாடார்கள் குடியேறினர். இவர்களே இக்கிராமத்தை உருவாக்கிய முதல் குடும்பத்தவர்கள் அவர்களில் புலவர்கள் மற்றும் வில்லிசை கலைஞர்கள் அதிகமாக இருந்ததால் இவர்கள் குடியேறிய கிராமம் புலவன் குடியிருப்பு என்ற அடையாளப் பெயரைப் பெற்றது. (மேற்கு நெல்லையில் புலவர்கள் அதிகம் வசித்ததால் புலவன்பட்டி, புலவனூர் எனும் அடையாளப் பெயர்களைப் பெற்றுள்ள இரு கிராமங்கள் உள்ளன)

## புலவன் குடியிருப்பு கிராம உருவாக்கம்

புலவர்களைத் தொடர்ந்து அதே நாகர்கோவில் வட்டாரத்தைச் சார்ந்த பனையேற்று தொழில் செய்து வந்த நாடார்கள் குழுவாக இதே கிராமத்தில் இரண்டாம் குடியேற்றமாகக் குடியேறினர்.

இவர்களுக்குப் பின்பு புலவன் குடியிருப்பு கிராமத்திலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கோவிந்தபேரி எனும் பழமையான கிராமத்தில் வசித்து வந்த பனையேற்று தொழில் செய்து வந்த நாடார் சமூகத்தினர் கோவிந்தப்பேரியில் ஜமீன்தாராக ஆதிக்கம் செலுத்தி வந்த சீதாலட்சுமி அம்மாள் என்பவரின் ஒடுக்கு முறைகள் தாங்காது அங்கிருந்து புலவன் குடியிருப்பு கிராமத்தில் வந்து குடியேறினர் இவர்கள் வடக்கு வளசல் என்று அழைக்கப்படுகின்றனர்.

ஆனைகுளத்தில் இருந்து நாடார்கள் இங்கு குடியேறினர் இவர்கள் ஆனைகுளத்தார் குடும்பம் என்று இன்றளவும் அழைக்கப்படுகின்றனர். மேலும் பல இடங்களில் இருந்து நாடார்கள் இங்கு குடியேறவே குக்கிராமம் என்ற நிலையிலிருந்து பெருங்கிராமமாக புலவன்குடியிருப்பு மாறியது.

## நில சுயாதீனம் இல்லாத நிலையில் புலவன்குடியிருப்பு மற்றும் பூதத்தான் குடியிருப்பு கிராமத்தார்

புலவன்குடியிருப்பில் நாடார்கள் குடியேறிய காலகட்டத்தில் குடியேறிய நிலத்திற்கு அவர்கள் நில சொந்தக்காரர்களாக இல்லை. அவர்கள் குடியேறிய நிலங்களும் அவர்கள் குடியேறிய குடியிருப்புகளை ஒட்டி காணப்பட்ட பனை மரங்களை கொண்ட நிலங்களும் ஊரைச் சுற்றி இருந்த வயல் நிலங்களும் பத்தமடையைச் சார்ந்த சைவ வேளாளர் சமூகத்தவரான இரு அண்ணன் தம்பிகளான இரு பண்ணையார்களுக்கு சொந்தமானதாக இருந்தது.

## ரேனியஸ் ஐயரவர்களின் வருகையும் தென்மேற்கு நெல்லையில் கிறிஸ்தவமும்

1820 முதல் நெல்லை அப்போஸ்தலர் ரேனியஸ் ஐயரவர்கள் பாளையங்கோட்டையைத் தலைமை இடமாகக் கொண்டு அக்கால ஒருங்கிணைந்த திருநெல்வேலி மாவட்டம் முழுவதும் குதிரை மூலம் நற்செய்தி அறிவித்து வந்தார். தற்போதைய சேரன்மகாதேவி, நாங்குநேரி தாலுகாக்கள் மற்றும் ராதாபுரம் தாலுகாவின் மேற்கு பகுதி ஆகியவை அக்காலத்தில் தென்மேற்கு நெல்லை என்று அழைக்கப்பட்டது. திருநெல்வேலி திருமண்டலத்தில் தென்மேற்கு சபை மன்றமாக இது அறியப்படுகிறது. இதன் தலைமை இடமாக டோனாவூரும் துணைத்தலைமை இடமாக இடையன்குளமும் நீண்ட நாட்களாக இருந்தது. தென்மேற்கு நெல்லையில் புலவன் குடியிருப்புக்கு அருகில் இருந்த கிராமங்களில் 1824 இல் கோவிந்தபேரி மற்றும் நெடுவிளை, 1826 இல் புலியூர்குறிச்சி, 1825 இல் கரிசல், ஓடைக்கரை, துலுக்கப்பட்டி, துவரைகுளம், 1827 இல் இடையங்குளம், டோனாவூர், நல்லமரம், மாவடி, தோப்பூர், நெருஞ்சிவிளை ஆகிய கிராமங்களும் கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொண்டன.

## ரேனியஸ், பெற்றிட் மற்றும் சார்ஜென்ற் ஆகிய மூன்று தலைமை கண்காணிப்பு மிஷனரிகளின் காலத்தில் புலவன் குடியிருப்பு கிராமம்

ரேனியஸ் ஐயரவர்கள் தமது ஊழிய காலத்தில் (1820 - 1835) தமது மிஷனரி பணி குறித்து எழுதிய மிஷன் ரிப்போர்ட்களில் இரட்டை கிராமங்களாகக் காணப்படும் புலவன் குடியிருப்பு மற்றும் பூதத்தான் குடியிருப்பு கிராமப் பெயர்கள் இடம் பெறவில்லை, ஆனால் இவ்விரு கிராமங்களைச் சுற்றிலும் இருக்கிற பல்வேறு கிராமங்களின் பெயர்கள் அதில் இடம் பெற்றுள்ளது. அதேபோன்று பெற்றிட் தமது ஊழிய காலத்தில் (1835 - 1847) எழுதிய மிஷன் ரிப்போர்ட்களில் மற்றும் சார்ஜென்ட் தமது ஊழிய காலத்தில் (1847 - 1889) எழுதிய மிஷன் ரிப்போர்ட்களில் இவ்விரு கிராமங்களின் பெயர்களும் இடம் பெறவில்லை. அக்காலங்களில் இவ்விரு கிராமங்களும் தனித்தனி கிராமங்களாக உருவாக்கம் பெறாமல்,

கிராம நிலையை எட்டாமல் பனைமரங்களுக்கு மத்தியில் தனித்தனி வீடுகளாகக் கொண்ட குக்கிராமங்களாகக் களக்காடு - சேரன்மகாதேவி நெடுஞ்சாலையில் இருந்திருக்கலாம் என்பதை மாத்திரமே யூகிக்க முடிகிறது.

**உவாக்கர் மற்றும் E. S. கார் ஆகிய இரு தலைமை கண்காணிப்பு மிஷனரிகளின் காலம் – புலவன் குடியிருப்பு சபையின் தோற்றம்**

பேராயர். சார்ஜென்ற் அவர்களுக்குப் பின்னர் உவாக்கர் (1885-1900) மற்றும் E. S. கார் (1887-1915) ஆகிய இருதலைமை கண்காணிப்பு மிஷனரிகளும் பாளையங்கோட்டையைத் தலைமை இடமாகக் கொண்டு மிஷன் பணி செய்த காலத்தில் புலவன் குடியிருப்பு சபை தோன்றியது.

**இடையன்குளம் மற்றும் புலவன் குடியிருப்பில் நாடார்கள் குடியேற்றமும் இரு கிராமங்களுக்கு இடையேயான நெருங்கிய தொடர்புகளும்**

இராணி மங்கம்மாள் காலத்தில் காயாமொழியிலிருந்து நாடார் சமூகத்தினர் கோபாலசமுத்திரம் வழியாக வந்து இடையன்குளத்தில் குடியேறினர். இவர்கள் பசுவ நாடார் குடும்பத்தினர் என்று அழைக்கப்படுகின்றனர். அதற்கு முன் பெருமளவில் இடையர்கள், பிராமணர், பிள்ளைமார், இஸ்லாமியர் மற்றும் பல சமூகத்தினரும் இடையன்குளத்தில் வாழ்ந்து வந்தனர். முதல் நாடார் குடியேற்றத்தைத் தொடர்ந்து குட்டம் மிராய்தார் குடும்பம், கீழ்காடு குடும்பம், பூச்சிக்காடு குடும்பம், கடசமனை குடும்பம், வீரவநல்லூர் குடும்பம், பிள்ளைகுளம் குடும்பம் என மேலும் ஆறு குடும்பத்தினர் குழுவாக குடியேறவே இடையன்குளம் பெருங்கிராமமாக மாறியது. இடையர், பிராமணர், பிள்ளைமார் காலப்போக்கில் இடையன்குளத்தை விட்டு வெளியேறினர், இடையங்குளம் கிராமத்திற்கும் புலவன் குடியிருப்பு கிராமத்திற்கும் மிக நெருக்கமான தொடர்புகள், திருமண உறவுகள் இரு இடங்களிலும் நாடார்கள் குடியேறிய காலம் முதல் இருந்து வந்தது.

**புலவன் குடியிருப்பில் கிறிஸ்தவம்**

1890 களில் புலவன்குடியிருப்பு வைராக்கியம் மிக்க இந்து கிராமமாக இருந்தது. உவாக்கர் தலைமை கண்காணிப்பு மிஷனரி மற்றும் மாவட்ட சர்ச் கவுன்சில் தலைவர் ஆகவும், E. S. கார் மிஷனரி மாவட்ட சர்ச் கவுன்சில் உதவி தலைவர் ஆகவும் இருந்த அந்த காலகட்டத்தில் இடையன்குளம் வட்டாரத்திலும் புலவன் குடியிருப்பிலும் நற்செய்திப் பணி தீவிரமாக நடைபெற்றது. அனேகர் கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொண்ட போதிலும் வெளிப்படையாக தங்களை கிறிஸ்தவர்கள் என்று அடையாளப்படுத்தவும் தேவாலயம் கட்டி வழிபடவும் தயங்கி நின்றார்கள்.

**இடையன்குளம் சத்தியவாசகம் புலவன் குடியிருப்பில் திருமணம் செய்தல்**

அந்த நேரத்தில் நாகர்கோவில் வட்டாரத்தில் இருந்து முதலில் குடியேறி புலவன் குடியிருப்பு கிராமத்தை உருவாக்கிய குடும்பங்களைச் சார்ந்த. பெருநிலக்கிழாரான மாயஇசக்தி அம்மாள் என்பவரது ஒரே மகள் பொன்னம்மாளுக்கும் இடையன்குளத்தைச் சார்ந்த கிறிஸ்தவ வாலிபர் சத்தியவாசகத்திற்கும் திருமணம் நடைபெற்றது. பொன்னம்மாள் கிறிஸ்தவராகி கிறிஸ்தவ முறைப்படி சத்தியவாசகத்தை திருமணம் செய்ததாக அறிந்து கொள்ள முடிகிறது. பொன்னம்மாள் ஒரே பெண்ணாக இருந்தபடியினால் ஸ்ரீமான் சத்தியவாசகம் நாடார் தனது மனைவியின் வீட்டோடு புலவன் குடியிருப்பில் வாழும் சூழ்நிலை ஏற்பட்டது. ஸ்ரீமான் சத்தியவாசகம் ஆளுமை மிக்க ஒரு தலைவர், உதாரகுணமும் தைரியமும் கொண்டவர் இவர் திருமணம் ஆகி புலவன் குடியிருப்பு சென்ற காலத்தில் அருகருகே இருந்த புலவன் குடியிருப்பு மற்றும் பூதத்தான் குடியிருப்பு ஆகிய இரு கிராமங்களும் பத்தமடையைச் சேர்ந்த சகோதரர்களான இரு பண்ணையார்களின் நேரடி ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. இவர் அந்த இரு பண்ணையார்களிடமும் பேசி அவர்களது வசம் இருந்த இந்த இரு கிராமத்துக்கான 21 பங்கு நிலத்தை புலவன் குடியிருப்புக்கு பத்தரை பங்கு, பூதத்தான் குடியிருப்புக்கு பத்தரை பங்கு என பிரித்துக் கொடுத்து இரு கிராம மக்களும் சுயாதீனமாக வாழும் உரிமையை பெற்றுக் கொடுத்தார்.

**இப்பணி 1908 இல் நடைபெற்றதாகச் சொல்லப்படுகிறது.**

இவரது ஆளுமை திறன் அன்பு கூறும் திறன் காரணமாக புலவன் குடியிருப்பு கிராமத்தில் பாதி பேர் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்டார்கள். நாகர்கோவில் வட்டாரத்தில் இருந்து முதலில் குடியேறி புலவன் குடியிருப்பை உருவாக்கிய மற்றொரு குடும்பமான மூலவீட்டு குடும்பத்தில் ஈனமுத்து நாடார் என்ற பெரியவருக்கு ஐந்து ஆண் பிள்ளைகள் அவர்களில் மூன்றாவது மகனான தூசிமுத்து நாடார் கிறிஸ்தவத்தை ஏற்று ஞானமுத்து என திருமுழுக்கு பெற்றுக் கொண்டார். புலவன் குடியிருப்பில் இயேசுவடியான் நாடார் குடும்பத்தினர், நல்லதம்பி நாடார் குடும்பத்தினர், பேதுரு நாடார் நவமணி நாடார் குடும்பத்தினர், ஆனைகுளத்தார் குடும்பத்தினர், கோவிந்த பேரி வளசல் எனும் வடக்கு வளசல் துரைப்பாண்டி நாடார் வகையறா தாவீது பிச்சை குடும்பத்தினர் ஆகியோரும் தொடக்க காலத்தில் புலவன் குடியிருப்பில் கிறிஸ்தவத்தை ஏற்றவர்கள்.

**தேவாலய கட்டுமானம்**

பத்தமடை பண்ணையார்களிடம் இருந்து புலவன் குடியிருப்பு கிராமத்தாருக்கு நிலசுயாதீனம் கிடைக்க பெரும் முயற்சி மேற்கொண்ட ஸ்ரீமான் சத்திய வாசகம் நாடார் அவர்கள் தமது சொந்த நிலத்தை தேவாலயம் கட்ட அன்பளிப்பாக கொடுத்தார்கள். அந்த இடத்தில் தேவாலயம் அமைக்கப்பட்டது. அதுவே தற்போதைய சி எஸ் ஐ தேவாலயம் அமைந்துள்ள இடம்.

**சுத்தாங்க பிரிவினையில் புலவன்குடியிருப்பு திருச்சபை**

1870 களில் ஆக்ஸ்போர்டு இயக்கம் எனும் சடங்காச்சார இயக்கம் ஆங்கிலிக்கன் திருச்சபையில் புகுந்தது 1919 முதல் CMS மற்றும் SPG மிஷன் சங்க சபைகள் ஒரே ஐக்கியத்தில் செயல்பட செயல் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட தொடங்கியது. தேவாலய ஆல்டர் மேஜையில் சிலுவை வைக்க வேண்டும் என்பதற்கான தீர்மானம் CMS மற்றும் SPG மிஷன் சங்க

சபைகளனைத்தையும் உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டிருந்த டயோசிசன் கவுன்சிலில் கொண்டுவரப்பட்டது. அதை அந்த கூட்டத்தில் கனம். சாலமோன் பாக்கியநாதன் தலைமையில் ஒரு குழுவினர் கடுமையாக எதிர்த்தனர் சடங்காச்சாரங்கள் இல்லாத சுத்த சுவிசேஷம் என்ற சுத்தாங்க சுவிசேஷ கொள்கையை அடிப்படையாகக் கொண்ட CMS மிஷனின் சபைகளுக்குள் கீழ்க்கண்ட SPG மிஷனின் சடங்காச்சாரங்கள் SPG & CMS ஒன்றுபட்ட டயோசிசன் கவுன்சில் என்ற அமைப்பு காரணமாக CMS சபைகளுக்குள் புகுந்துவிடும் என அஞ்சினர்.

1. திருமேஜையில் சிலுவை. விளக்குத்தண்டுகள், மெழுகுவர்த்திகள், பூந்தொட்டிகள் வைத்தல். திருமேஜை மீது பல வர்ண நிறம் கொண்ட துணி விரிப்புகளை பயன்படுத்தி மூடுதல் மற்றும் திருவிருந்து பாத்திரங்களை பலவர்ண மூடு துணி மூலம் மூடுதல் (CMS ஆங்கிலிக்கன் சபைகளில் வெண்ணிற மூடு துணி, வெண்ணிற துணி விரிப்பு மட்டுமே அது வரை பயன்படுத்தப்பட்டு வந்தது)

2. ஆல்டர் முன்பாக தலைகுனிந்து (bow) வணக்கம் செலுத்துதல், முழங்கால் படியிடுதல்.

3. தேவாலய ஆராதனை வேளைகளில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி - திரியேக துதி பாடும்போது, / உச்சரிக்கும் போது ஆல்டரை நோக்கி திரும்புதல்,

4. போதகர் தம் அங்கியின் மேல் பலவர்ண மேலாடை ஸ்டோல் (Stole) அணிதல்,

5. தேவாலய கண்ணாடிகளில் அப்போஸ்தலர் படங்கள் மற்றும் கிறிஸ்தவ அடையாள சித்திரங்கள் வரைதல்,

6. ஆராதனை வேளைகளில் தூபம் காட்டுதல்,

7. திருவிருந்து ஆராதனையில் அப்பம் திராட்சரசம் ஸ்தோத்தரித்து ஆசீர்வதிக்கப்படுகையில் தேவாலய மணியை ஒலிக்கச் செய்வது,

8. பாடகர் பவனிகளில் முன் நிலையில் சிலுவையை ஏந்திச் செல்வது,

9. பண்டிகை / திருவிழா நாட்களில் அதற்கான சிறப்பு திருச்சிலுவையை பாடகர் பவனியில் பின் நிலையில் ஏந்திச் செல்வது,

10. தேவாலயத்திற்கான பெயரை உடைய திருக்கொடியை பாடகர் பவனியின் நடுவே ஏந்திச் செல்வது,

11. திருவிருந்து ஆராதனை நடத்தும் முறையில் திருமேஜையின் பக்கவாட்டிலிருந்து திருவிருந்து ஆராதனை நடத்தும் முறை SPG இல் இருந்தது. ஆனால் CMS சபைகளில் திருவிருந்து மேஜையின் பின்புறம் குருவானவர் நின்று சபை மக்களை நோக்கி பார்த்தவாறு திருவிருந்து ஆராதனை நடத்தும் முறை பின்பற்றப்பட்டு வந்தது.

12. SPG மிஷன் தேவாலயங்களில் ஆல்டர் திருமேஜை ஆல்டர் பின்புற சுவரை ஒட்டி போடப்பட்டிருந்தது. CMS மிஷன் தேவாலயங்களில் ஆல்டர் மேஜை ஆல்டர் பின்புற சுவரை ஒட்டி போடப்படாமல் ஆல்டர் மத்தியில் இருந்தது ஆல்டர் சுவருக்கும் திருவிருந்து மேஜைக்கும் இடையே இடைவெளி இருந்தது.

மேற்கண்ட சடங்காச்சாரங்கள் SPG குருமார்கள் CMS சபைகளுக்குள் குருத்துவ பணி செய்ய வருகிறபோது உள்ளே புகுந்து விடும் என்ற அச்சம் காரணமாக ஆழ்வாநேரி சர்க்கிள் சேர்மன் கனம். அருள் மாணிக்கம் ஐயரவர்கள், மருதகுளம் கனம். சாலமோன் பாக்கியநாதன் ஐயரவர்கள், கனம். வேதக்கண் ஐயரவர்கள், மாவட்ட விவாக பதிவாளர் ஜான் விசுவாசம் சாமுவேல், தாசில்தார் மோசஸ் சீனிவாசகம், சுவிசேஷகர் தாவீது ஐயா ஆகிய ஆறுபேர் மற்றும் புலவன் குடியிருப்பு பெருநிலக்கிழார் ஸ்ரீமான் சத்தியவாசகம் நாடார் போன்ற பெரியோர்கள் இணைந்து CMS மற்றும் SPG மிஷன் சபைகள் இணைந்த ஒன்றுபட்ட டயோசிசன் கவுன்சில் அமைப்பை 1924 இல் வலிமையாக எதிர்த்தனர். அதை டயோசிசன் நிர்வாகம் பொருட்படுத்தாத படியால் 1924 இல் CMS சுத்தாங்க சுவிசேஷ திருச்சபை எனும் தனி சபையை நிறுவினார்கள். சுவிசேஷகர் தாவீது ஐயாவும் புலவன்குடியிருப்பு சபை மூப்பர் ஸ்ரீமான் சத்திய வாசகம் நாடாரும் நெருங்கிய நண்பர்கள் ஆதலால் புலவன் குடியிருப்பு திருச்சபை முழுமையாக CMS சுத்தாங்க சுவிசேஷ திருச்சபையைச் சார்ந்து நின்றது.

## புலவன் குடியிருப்பு சுத்தாங்க சுவிசேஷ திருச்சபை தேவாலயத்துக்கு என தனி இடம் வாங்கப்படுதல்

புலவன் குடியிருப்பு தேவாலய இடத்தை ஸ்ரீமான் சத்திய வாசகம் நாடார் கொடுத்திருந்த போதிலும் நில பத்திரம் டயோசிசன் நிர்வாகத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்தபடியால் அந்த தேவாலயத்தை புலவன் குடியிருப்பு சுத்தாங்க சுவிசேஷ திருச்சபையாரால் பயன்படுத்த இயலாமல் போனது. தேவாலயம் பல ஆண்டுகளாக பூட்டப்பட்ட நிலையில் இருந்தது. நாகர்கோவில் - பாபநாசம் நெடுஞ்சாலையை ஒட்டி CMS சுத்தாங்க சுவிசேஷ திருச்சபை தேவாலயம் கட்ட ஸ்ரீமான் சத்திய வாசகம் நாடாரால் புலவன் குடியிருப்பில் நிலம் வாங்கப்பட்டது அங்கு தேவாலயம் கட்டப்பட்டது. 1924 க்குப் பின்னர் சில ஆண்டுகள் கழித்து இரு குடும்பத்தினர் (இயேசுவடியான் நாடாரின் மகன் ஆபிரகாம் நாடார் குடும்பத்தினர் பேதுரு நாடார் குடும்பத்தினர்) புலவன்

குடியிருப்பு சுத்தாங்க சுவிசேஷ சபையில் இருந்து டயோசிசன் சபையில் சேர்ந்தார்கள். ஆதலால் அடைக்கப்பட்டிருந்த பழைய தேவாலயம் திறக்கப்பட்டது. அந்த இரண்டு குடும்பத்தினர் மட்டும் அந்த இடத்தில் ஆண்டவரை வழிபட்டு வந்தனர்.

### திருநெல்வேலி டயோசிசன் ஆண்டறிக்கையில் புலவன் குடியிருப்பு திருச்சபை

திருநெல்வேலி டயோசிசன் 1930 ஆம் ஆண்டு ஆண்டறிக்கையில் இடையன்குளம் பாஸ்டரேட்டுக்கு உட்பட்ட சபைகள் பட்டியலில் கரிசல்பட்டி, புலவன் குடியிருப்பு சபைகள் இடம் பெறவில்லை. இக்கிராமங்களில் சபையார் அனைவரும் சுத்தாங்க சுவிசேஷ திருச்சபையில் அக்காலத்தில் சேர்ந்திருந்தனர்.

- திருநெல்வேலி திருமண்டல 1933 ஆம் ஆண்டு ஆண்டறிக்கையில்
- புலவன்குடியிருப்பு திருச்சபை இடம் பெற்றுள்ளது. 1933 ஆம் ஆண்டு ஆண்டறிக்கைப்படி புலவன்குடியிருப்பு திருச்சபையில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் ஆறு பேர். பரி. நற்கருணைக்காரர்கள் யாரும் இல்லை.
- 1943 ஆம் ஆண்டு திருநெல்வேலி திருமண்டல ஆண்டறிக்கைப்படி புலவன்குடியிருப்பு திருச்சபையில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் 14 பேர். பரி. நற்கருணைக்காரர்கள் 8 பேர்.
- 1962 - 1963 ஆம் ஆண்டு திருநெல்வேலி திருமண்டல ஆண்டறிக்கைப்படி 1963 இல் புலவன்குடியிருப்பு திருச்சபையில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் 9 பேர். பரி. நற்கருணைக்காரர்கள் 4 பேர்.
- 1970 - 1971 ஆம் ஆண்டு திருநெல்வேலி திருமண்டல ஆண்டறிக்கைப்படி 1971 இல் புலவன்குடியிருப்பு திருச்சபையில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் 12 பேர். பரி. நற்கருணைக்காரர்கள் 4 பேர். 1933 முதல் சுமார் 40 ஆண்டுகளாக சில குடும்பத்தார் மட்டுமே CSI டயோசிசன் திருச்சபையில் இருந்து வந்தார்கள். 1980 க்குப் பின்னர் இந்த நிலை மாறியது இந்துக்களில் இருந்தும் CMS சுத்தாங்க சுவிசேஷ திருச்சபையில் இருந்தும் CSI டயோசிசன் திருச்சபையில் பல குடும்பத்தினர் சேர ஆரம்பித்தார்கள். 1997 - 1998 ஆம் ஆண்டு திருநெல்வேலி திருமண்டல ஆண்டறிக்கைப்படி 1998 இல் புலவன்குடியிருப்பு திருச்சபையில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் 52 பேர். பரி. நற்கருணைக்காரர்கள் 26 பேர்.

### ஞானசேகரன் பாண்டியன் உபதேசியார் காலத்தில் சபை வளர்ச்சி – ஓடு போட்ட தேவாலயம் பிரதிஷ்டை

1972 முதல் 1992 வரை சபை ஊழியர் ஆக இருந்த வடக்கு இடையங்குளம் கிராமத்தைச் சார்ந்த ஞானசேகரன் பாண்டியன் உபதேசியார் காலத்தில் புலவன் குடியிருப்பு சபை நன்கு வளர்ச்சியை பெற்றது. கனம். J. பால்ராஜ் ஐயரவர்கள் கரிசல் சேகர குருவானவராக பணி செய்த போது (1975 - 1981) ஞானசேகரன் பாண்டியன் உபதேசியார் சபை ஊழியராக பணியாற்றி வந்த காலத்தில் சபை உருவான காலம் முதல் மேற்கூரை ஓலையாய் இருந்த தேவாலயம் முற்றிலும் அகற்றப்பட்டு புதிய தேவாலயம் கட்டப்பட்டு மேற்கூரை ஓடு போட்டதாக அமைக்கப்பட்டு டிசம்பர் மாதம் 26 ஆம் நாள் தூய. ஸ்தேவான் திருநாள் அன்று தூய. ஸ்தேவான் ஆலயம் என்ற பெயரில் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

### இடைக்கால புலவன் குடியிருப்பு திருச்சபை

1992 முதல் 2004 வரை வடக்கு இடையன்குளத்தைப் பூர்வீகமாகக் கொண்ட ஜார்ஜ் உபதேசியார் இங்கு சபை ஊழியராகப் பணி செய்தார்கள். 2004 முதல் 2006 வரை மேலபத்தையைப் பூர்வீகமாகக் கொண்ட தங்கராஜ் உபதேசியார் இங்கு சபை ஊழியராகப் பணி செய்தார்கள்.

### தற்போதைய புலவன் குடியிருப்பு திருச்சபை

2006 முதல் இன்று வரை (2023) ஓடைக்கரையைப் பூர்வீகமாகக் கொண்ட தே. ஜேக்கப் அன்பின்ராஜ் உபதேசியார் இங்கு சபை ஊழியராகப் பணி செய்து வருகிறார்கள். இவர்களது பணி காலத்தில் சபை அதிக வேகத்தில் வளர்ச்சியை பெற்றது. தே. ஜேக்கப் அன்பின்ராஜ் உபதேசியாரின் தாயார் புலவன் குடியிருப்பைச் சார்ந்தவர்கள். புலவன் குடியிருப்பு CMS சுத்தாங்க சுவிசேஷ திருச்சபையில் பெரும் பிரச்சனை ஏற்பட்டு அங்கிருந்து 10 க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் ஒரே நேரத்தில் சபையை விட்டு வெளியேறினர். அவர்கள் புலவன் குடியிருப்பு CSI திருச்சபைக்கு வர விரும்பினர். விரும்பிய அனைவரும் புலவன் குடியிருப்பு CSI திருச்சபையில் சேர்த்து கொள்ளப்பட்டார்கள். தற்போது புலவன் குடியிருப்பு CSI திருச்சபையில் சுமார் 35 குடும்பத்தினர் உள்ளனர். புலவன் குடியிருப்பு CMS சுத்தாங்க சுவிசேஷ திருச்சபையில் சுமார் 30 குடும்பத்தினர் உள்ளனர். புலவன் குடியிருப்பு பெந்தேகோஸ்தே திருச்சபையில் சுமார் 100 குடும்பத்தினர் உள்ளனர். இன்றைய புலவன் குடியிருப்பு கிராமத்தில் சுமார் 70 சதவீதத்தினர் கிறிஸ்தவர்களாக உள்ளனர்.

### புதிய தேவாலயம் மற்றும் தேவாலய கோபுரம் பிரதிஷ்டை

ஓடு போடப்பட்டிருந்த புலவன் குடியிருப்பின் பழைய CSI தேவாலயம் முற்றிலும் அகற்றப்பட்டது. புதிய தேவாலயம் கட்ட 2009 இல் அப்போதைய கரிசல் சேகர குருவானவர் அருள்திரு. அருள் வேதநாயகம் ஐயா அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. புதிதாக கட்டப்பட்ட தேவாலயமும் தேவாலய கோபுரமும் 13. 05. 2012 அன்று கரிசல் சேகர குருவானவர் அருள்திரு. அருள் வேதநாயகம் ஊழியர் திரு. தே. ஜேக்கப் அன்பின்ராஜ் அவர்கள் காலத்தில் திருநெல்வேலி திருமண்டல பேராயர் மகாகனம் J J கிறிஸ்துதாஸ் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது.


# புத்தக வெளியீடு

மன்னா செல்வகுமார்










சாத்தான்குளம் திருச்சபை சரித்திரம் நூல் வெளியீட்டு விழா

திருநெல்வேலி திருச்சபையில் கிறிஸ்துவுக்காக இரத்தச் சாட்சியாக மரித்த முதல் பெண் நம்பியம்மாள். திருப்புளியங்குடியில் ஓர் எளிய பெண்ணின் தியாக வரலாறு நம்மை நிமிர வைக்கிறது.

திருப்புளியங்குடியில் திருச்சபை கனம் ரேனியஸ் நீண்ட சுற்றுப் பிரயாணங்கள் செய்து சுவிசேஷத்தைப் பற்பல கிராமங்களில் பிரசங்கித்து வருவது ஐயரவது வழக்கம். 1823 ஆம் ஆண்டு திருப்புளியங்குடி சபையை இரண்டாவதாக நிறுவினார்.

மேற்கண்ட சபையின் இருநூற்றாண்டு நேற்று கொண்டாடப்பட்டது. இதில் சிறப்பு அழைப்பாளர்களாக CSI மதுரை ராமநாதபுரம் திருமண்டல பேராயர் Rt.Rev.Dr. D ஜெயசிங் பிரின்ஸ் பிரபாகரன் அவர்களும், சென்னை ECI திருச்சபையை சார்ந்த பேராயர் Rt.Rev.Dr. டேவிட் ஒநேசிமு அவர்களும் கலந்து கொண்டு நம்பியம்மாள் மண்டபத்தை திறந்து வைத்தார்கள்.

இந்த விழாவில் நம்முடைய கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தினால் மறைந்த பேராசிரியர் கிறிஸ்துதாஸ் ஐயா அவர்களால் பல ஆண்டுகளுக்கு முன்பு எழுதி கைபிரதியாக இருந்த சாத்தான்குளம் திருச்சபை சரித்திர பிரதிகளை அவர்களின் குடும்பத்தினரால் முயற்சிகள் எடுத்து டாக்டர். டேவிட்சன் வினோத் அவர்களின் குடும்பத்தினாரால் பிரிண்ட் செய்து இருநூற்றாண்டு விழா கொண்டாடும் திருப்புளியங்குடி சபையில் வைத்து தூத்துக்குடி நாசரேத் திருமண்டல மூத்த குருவானவர் DGA தாமஸ் அவர்கள் அறிமுகப்படுத்த CSI மதுரை ராமநாதபுரம் திருமண்டல பேராயர் Rt.Rev.Dr. D ஜெயசிங் பிரின்ஸ் பிரபாகரன் அவர்கள் வெளியிட சென்னை ECI திருச்சபையை சார்ந்த பேராயர் Rt.Rev.Dr. டேவிட் ஒநேசிமு அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். திருப்புளியங்குடி சேகரத் தலைவர் அருள்திரு M அருமை துரை அவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்கள். வரலாற்றுச் சங்க உறுப்பினர் இரயில் ரவி அண்ணன் ஏற்பாடுகள் செய்திருந்தார்.

பராபரன் இந்நூலை இயற்றியவரையும், வெளியிட உதவியவர்களையும், இதனைப் படிப்பவர்களையும் ஆசீர்வதிப்பாராக.

# பண்டிதர் நினைவு தின விழா

மன்னா செல்வகுமார்

ராவ் சாகேப் ஆபிரகாம் பண்டிதர் நினைவு தின விழா

தென்காசி மாவட்டம் சாம்பவர்வடகரையில் ஆபிரகாம் பண்டிதர் தமிழ் வளர்ச்சிக் குழு நடத்திய சகலகலா வல்லவரின் கொண்டாட்டங்கள் (ராவ் சாகேப் ஆபிரகாம் பண்டிதர்) 26.08.2023 அன்று சிறப்பாக நடைபெற்றது.

ஆபிரகாம் பண்டிதர் தமிழ் வளர்ச்சிக் குழு சார்பாக அருள்திரு. A. ஜெபரத்தினம். தலைமை வகித்தார். சுரண்டை தொழிலதிபர் R பாலசந்திரன் அவர்கள் முன்னிலை வகித்தார். சிறப்பு விருந்தினர்களாக தென்காசி சட்டமன்ற உறுப்பினர் திரு.S. பழனி நாடார் அவர்கள், மற்றும் சுரண்டை தொழிலதிபர் STK காமராஜ் அவர்கள், ஊர் கமிட்டி தலைவர் மற்றும் முன்னாள் பேரூராட்சி தலைவர் V.P மூர்த்தி அவர்களையும் குழு செயலர் தமிழாசிரியர் திரு. D. மாசிலாமணி அவர்கள் வரவேற்று பேசினார். இந்த விழாவில் வாழ்த்துரை வழங்குவதற்காக உலக அமெரிக்க தமிழிசைப் பல்கலைக்கழகத்தை சேர்ந்த முனைவர். ஷைலா ஹெலின் அவர்களும், சிங்கப்பூர் ஊடகவியலாளர் திருமதி. சாந்தினி முத்தையா அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். இந்த விழாவில் சிறப்பு பேச்சாளர்களாக வழக்கறிஞர் D. சாமுவேல் ஆபிரகாம் அவர்களும், சென்னை கிறிஸ்தவ கல்லூரியின் முன்னாள் தமிழ்த்துறை தலைவர் முனைவர். மோசசு மைக்கேல் பாரடே அவர்களும், திரைப்பட இயக்குனர், பூவுலகின் நண்பன் ஆர். ஆர். சீனிவாசன் அவர்களும் சுந்தரேசபுரம் நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர் திரு. ரசூல் அகமது இப்ராகிம் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இவ்விழாவில் கட்டுரைப் போட்டியில் முதல் மூன்று இடங்களை பிடித்த கட்டுரையாளர்களுக்கு (Rs.25,000,15,000,10,000) சென்னை ஆச்சி மசாலா குடும்பத்தின் சார்பில் பரிசுகள் வழங்கப்பட்டது. ஆச்சி மசாலா அவர்கள் குடும்பத்தின் சார்பில் ஆபிரகாம் பண்டிதர் கட்டுரை தொகுப்பு புத்தகம் வெளியிடப்பட்டது. கட்டுரை எழுதிய அனைவருக்கும் சான்றிதழ் மற்றும் பரிசுகள் வழங்கப்பட்டது. வந்திருந்த ஊர் கமிட்டி நிர்வாகிகள் மற்றும் உறவின் முறை கமிட்டி அங்கத்தினர்கள், திரு. பொன்னையா அவர்கள், வைகுண்ட ராஜன், செல்வின் அப்பாதுரை, பேராசிரியை. ஜெபா கப்பல் மற்றும் மதுரை காமராஜ் பல்கலைக்கழகத்தில் இருந்து வந்திருந்த பாதர். மரிய தனராஜ், பேராசிரியர். ஜஸ்டின் செல்வராஜ், ஓவியர் ஜெயராமன், இசை கலைஞர்கள் தஞ்சை சுப்பிரமணியன், செல்வின், சித்த கல்லூரி மாணவர்கள் ஊர் பொது மக்கள், வாலிபர்கள் சாம்பவர் வடகரை தலைப்பாகட்டு பிரியாணி உரிமையாளர் அனைவருக்கும் விருந்து உபசரிப்பு ஏற்பாடு செய்திருந்தார். சிறப்பிக்க உதவிய பொன்வேலன் பொன்ராஜ், T.T.V. சந்திர சேகரன், திரு. ஆல்வின் ஜேக்கப், ஐசக் தேவநேசன், சார்லஸ் வரலாற்றுச் சங்க உறுப்பினர் அனைவருக்கும் ஒருங்கிணைப்பாளர் மன்னா செல்வகுமார் நன்றி தெரிவித்தார்.

இறுதியாக குழு சார்பாக தமிழக அரசுக்கு கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. ஆசிரியராக, சித்த மருத்துவராக, கவிஞராக, தமிழிசை ஆய்வாளராக தொண்டாற்றிய ராவ் சாகேப் ஆபிரகாம் பண்டிதர் தமிழிசை உலகின் நீண்ட இருளைக் கிழித்து வெளிவந்த முழுமதி ஆபிரகாம் பண்டிதர் அவர்களின் நினைவு நாளை அரசு விழாவாகவும், பிறந்த ஊரில் மணி மண்டபம் அமைக்கவும், நினைவு நூலகம் அமைக்கவும் ஆபிரகாம் பண்டிதர் தமிழ் வளர்ச்சி குழு அரசுக்கு கோரிக்கை வைத்தது.







- கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் மற்றும் மேய்ப்பரின் பயிலகம் சார்பாக கடந்த இரண்டு மாதமாக இணையதள **சீர்திருத்த தமிழ் திருச்சபையின் ஆரம்பங்கள்** என்ற தலைப்பில் ஒவ்வொரு மாதமும் இரண்டாவது செய்வாய்கிழமைகளில் இரவு ஏழு முப்பது மணிக்கு நடைபெற்று வருகின்றன.
- கிறிஸ்தவ வரலாற்றுச் சங்க உறுப்பினர்கள், வாசகர்கள் அனைவரும் கலந்து கொள்ள அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்






தஞ்சை சரஸ்வதி மஹால் நூலகத்தில் பேராசிரியர் மணிமாறன் ஐயா அவர்களை சந்தித்த தருணம்




## தரங்கம்பாடி கடற்கரையில்....



சீகன்பால்க் மற்றும் ஹென்ரிச் புளுட்ச்சோ (Heinrich Plütschau) இந்தியா வரும் பயணத்தின் போது, கப்பலில் இறந்தவர்களின் சடலங்களைக் கடலில் வீசியெறிவதையும், அலைகளாலும், புயல்களாலும் கப்பல் அலைக்கழிக்கப்பட்டதையும் நேரடியாகக் கண்ட சீகன்பால்க் தனது கடற்பயணத்தை, 'மரணக் கல்விச் சாலை' (Academy of death) என்று குறிப்பிட்டார்.

இருவரும் ஏழு மாதக் கப்பல் பயணத்தில், 1706 ஆம் ஆண்டு, ஜுலை 9ஆம் நாள் தரங்கம்பாடியை வந்தடைந்தனர். மன்னர் அவர்களை அனுப்பியிருந்தால், அவர்கள் மன்னரின் உளவாளிகளாய் இருப்பார்கள் என்ற சந்தேகத்தால் அவர்களுக்குத் தகுந்த மரியாதை தரப்படவில்லை. அவர்களின் வருகை டேனிஷ் கிழக்கிந்திய கம்பெனியின் கவர்னருக்கும், டேனிய போதகர்களுக்கும் அதிருப்தியை அளித்தது. அவர்கள் கப்பலிலிருந்து கரை வந்து சேர மூன்று நாட்கள் படகுகள் கொடுக்கப்படவில்லை. கவர்னர் ஹாசியஸ் (Hassius) யைச் சந்திக்க காலை 10 மணியிலிருந்து மாலை 4 மணிவரை காத்துக் கிடந்தனர். பல மணி நேரம் சந்தை வெளியில் தனித்து விடப்பட்டனர். முடிவில் போர்ச்சுக்கீசியருடைய அடிமைகள் தங்கும் இடத்தில் தங்கினர். ஆனால் இந்தியாவில் தங்கியிருந்த ஜெர்மானியர்கள் சீகனுக்கு முழு ஒத்துழைப்பைக் கொடுத்தனர். அதனை நினைவு படுத்தும் நினைவு சின்னத்தில்..... இரயில் ரவி,சாம்,தயாநிதி,இஸ்ரேல், ஜோஸ்வா, ஜோஸ்வா கண்ணன்,விக்டர் சாமுவேல்....

# சங்க பணிகளுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்

## கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் அன்பின் வாழ்த்துக்கள்.

பூர்வ நாட்களை நினை; தலைமுறை தலைமுறையாய்ச் சென்ற வருஷங்களைச் கவனித்துப்பார்; உன் தகப்பனைக் கேள், அவன் உனக்கு அறிவிப்பான், உன் மூப்பர்களைக் கேள், அவர்கள் உனக்குச் சொல்லுவார்கள். உபாகமம் 32.7

ஒருங்கிணைந்த திருநெல்வேலி திருச்சபை உருவாகி சுமார் இரண்டரை நூற்றாண்டுகளாகின்றன. பராபரனின் பெரிதான கிருபையினால் இன்று திருமண்டலங்களாகவும், பல நூறு திருச்சபைகளாகவும் பெருகிவந்து கொண்டு இருக்கின்றது. பராபரனுக்கு ஸ்தோத்திரம். திருச்சபை சரித்திரத்தை அறிய வேண்டிய அவாவும் மக்கள் மனதில் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றது. இந்நிலையில் **'யார் நமது காரியமாய் போவான்,' இதோ அடியேன் இருக்கின்றேன், என்னை அனுப்பும்'** என்று ஏசாயா தீர்க்கன் முன் வந்தது போல திருநெல்வேலி வரலாற்றை மீள் பதிப்பு செய்யவும், வரலாற்று பணிகளை கள ஆய்வுப் மேற்கொள்ளவும், நின்றுபோன வரலாற்று **'தொடரோட்டத்தை தொடரவும்'** கடவுளால் தெரிந்துகொள்ளப்பட்ட இயக்கமே **'திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'**

**கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்** தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்கள் பலரின் அரும்பெரும் முயற்சியினால் தொடங்கப்பட்டது. நம்முடைய வரலாற்றுச் சங்கத்தின் தரிசனத்தில், இறையியல் கல்லூரி மாணவர்கள் பலர் தன்னார்வத்தோடு தங்களையும் இணைத்து செயல்பட்டு வருகிறார்கள். மேலும் தமிழ்நாடு முழுவதும் உள்ள பல வரலாற்று ஆய்வாளர்களுடன் கைகோர்த்து இப்பணியைச் செய்து வருகின்றோம்.

வரலாற்றுச் சங்கமானது கடந்த ஐந்து ஆண்டுகளாக உங்களுடைய ஜெபத்தினாலும் பேராதரவினாலும், மிகச்சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. நமது பத்து அம்ச திட்டங்களில் மாத ஆய்விதழ், பழைய புத்தகங்கள் சேகரித்தல் மற்றும் டிஜிட்டல் செய்யும் பணி, புத்தக மறுப்பதிப்பு பணிகள், நூலகப் பணிகள், மிஷன் சுற்றுப்பயணம், புத்தக வனம் இணைய செயலி, ஆவணப்படம் தயாரித்தல், மிஷன் அருங்காட்சியகம், ஆய்வுக் கருத்தரங்கம் போன்ற பணிகளை கடந்த ஆண்டுகளில் செய்து வருகின்றதை நீங்கள் அறிந்ததே.

இந்த ஆண்டிலும் வரும் ஆண்டுகளிலும் நமது இலக்குகளை அதிகப்படுத்தி இருக்கின்றோம். குறிப்பாக **புத்தக மறுப்பதிப்பு, நூலகப் கட்டிட பணிகள், மிஷன் அருங்காட்சியகம்** மேற்கண்ட பணிகளை செய்ய வேண்டிய தேவையில் இருக்கின்றோம். இப்பணிகளில் நீங்கள் குடும்பமாகவோ, இயக்கமாகவோ அல்லது தனிநபராகவோ இணைந்து செயல்படவும் பங்கு பெறவும் அன்புடன் அழைக்கின்றோம்.

**நம் சங்கத்தின் பத்து அம்ச செயல்திட்டத்தை நினைவுபடுத்துகின்றோம்:-**

தமிழ் கிறிஸ்தவ வரலாற்றில் நீண்ட இடைவெளிக்கு பின்பு மீண்டும் ஒரு வரலாறு படைத்துக் கொண்டு இருக்கும் மாத ஆய்விதழ் தான் **'கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்'**. கடந்த 2020ம் ஆண்டு ஜுன் மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு தலைப்பைக் கொண்டு பல்வேறு அரிய ஆய்வுக் கட்டுரைகளோடு மிக சிறப்பாக வெளி வந்து கொண்டிருக்கிறது. **மறைக்கப்பட்ட, மறந்த, மறைந்த** மிஷனெரிகள் மற்றும் திருச்சபை வரலாறுகள், கள ஆய்வுகள், பல்வேறு அரிய வரலாற்று பொக்கிஷங்களுடன் தமிழகம் முழுவதும் தொடர்ந்து 1530 க்கு மேற்பட்ட வாசகர்களுடன் வந்து கொண்டு இருக்கின்றது.

- காலவோட்டத்தில் அறுபட்டுக்கிடந்த இசைத் தமிழ் கண்ணிகளைத் தற்கால இசைத் தமிழ் உலகுக்குக் கோர்த்துக் கொடுத்த மாபெரும் இசைத் தமிழ் அறிஞர் தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் அவருடைய அளப்பரிய செயல்களை நினைவுகூறும் வகையில் **ஆபிரகாம் பண்டிதர் நினைவு மின்னனு ஆராய்ச்சி நூலகம்** நம்முடைய சங்கத்தின் சார்பில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆபிரகாம் பண்டிதர் நினைவு ஆராய்ச்சி நூலகமானது தமிழ் கிறிஸ்தவ மின்னனு நூலகத்தில் **முதல் நூலகம்** என்ற சிறப்பைப் பெற்றது. இந்த நூலகமானது தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், தமிழ் கிறிஸ்தவ ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ் கிறிஸ்தவ வரலாற்றில் ஒரு புதிய மைல் கல்லாகவும் அமையும். மேலும் அநேக புதிய தமிழ் கிறிஸ்தவ எழுத்தாளர்களை உருவாக்கவும், ஆராய்ச்சியாளர்களை உருவாக்கவும் இது உதவியாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.
- வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, மறுபதிப்பு செய்து வெளியிடப்படாத கிறிஸ்தவ மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாறு புத்தகங்களை மறுபதிப்பு செய்து வருகின்றோம். குறிப்பாக நெல்லை திருமண்டல வரலாற்று அறிஞர் பேராசிரியர் அருள்திரு **தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர்** அவர்களுடைய படைப்புகளை மறுபதிப்பு செய்து இன்றைய தலைமுறைகளுக்கு கொண்டு செல்லவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றோம். குறிப்பாக கடந்த ஆண்டு பேராசிரியர் அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் அவர்களின் வரலாற்று சிறப்புமிக்க புத்தகம் அனைத்தையும் மறுபதிப்பு செய்து வருகின்றோம்.

- நம்முடைய வரலாற்று சங்கமும் கிறிஸ்தவ ஆய்வு மற்றும் ஆவணப்படுத்து மையமும் இணைந்து **‘புத்தக வனம்‘** செயலி செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றது. இந்த செயலி தமிழகத்தில் முதல் முறையாக டிஜிட்டல் முறையில் கையடக்க வடிவில் புத்தகமாக முழு நூலகமாக உங்கள் கைகளில் கொடுத்துள்ளோம். இன்னும் பல ஆயிரம் புத்தகங்களை பதிவேற்றும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மேலும் பேராசிரியர் அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் பெயரிலேயே **நினைவு புத்தக அங்காடி** ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- தமிழக வரலாற்றில் கிறிஸ்தவ மிஷனெரிகளுடைய பங்கு குறிப்பிடத்தக்கது. அந்த மிஷனெரிகள் பணி செய்த இடங்கள், அவர்களுடைய நினைவிடங்கள், தங்கியிருந்த இல்லங்கள், கல்லறைகள், வரலாற்று சிறப்புமிக்க ஆலயங்கள், இரத்த சாட்சிகளாக மரித்த மிஷனெரிகள் பணி செய்த மற்றும் தங்களை இரத்த சாட்சியாக ஒப்புக்கொடுத்த இடங்களை தெளிவான முறையில் பார்வையிடவும், வெளியிடங்களிலிருந்து வரும் மக்களின் வசதிக்காகவும் **Mission Tourist Map** என்று செயலி உருவாக்கி அதன் மூலம் அவர்கள் தங்குமிடங்கள், வழித்தடங்கள் அடங்கிய மின்னியல் கையேடு அமைப்பது.
- வரலாற்றின் பக்கங்களில் மறைந்து கிடக்கும் கீர்த்தனை கவிஞர்கள், உபதேசிமார்கள், முன்னாள் குருமார்களுடைய வரலாற்று பொக்கிஷங்களை சேகரித்து வருகிறோம். மேலும் அவர்களுடைய வரலாற்றுத் தகவல்கள், அவர்களால் உருவாக்கப்பட்ட திருச்சபைகள், கிறிஸ்தவ பாடல்கள் உருவாக்கம் பெற்ற வரலாறுகள், பாடல்களின் வரலாறுகளையும் சேகரித்து அதை மின்னியல் முறைக்கு மாற்றும் பணிகளையும் செய்து கொண்டு இருக்கின்றோம்.
- தமிழ் கிறிஸ்தவ பழைய புத்தகங்களை சேகரித்து மின்னியல் முறையில் ஆபிரகாம் பண்டிதர் நினைவு ஆராய்ச்சி நூலகத்திலும், பேராசிரியர் **அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் நினைவு புத்தக அங்காடி**யிலும் பதிவேற்றம் செய்வதுடன் புத்தகங்களை தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பயன்படும் விதமாக ஒரு சிறந்த ஆய்வு நூலகம் அமைக்கவும் முயற்சிகளும் மேற்கொண்டு வருகிறோம்.
- மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாற்று சம்பவங்களை அடிப்படையாக கொண்டு ஆவணப்படங்களை வெளியிடுவதற்கான முயற்சிகள் செய்து கொண்டு இருக்கிறோம். கர்த்தருக்கு சித்தமானால், வருகிற ஆண்டு **கிளாரிந்தா, ஏமி கார்மைக்கேல்** மிஷனெரிகளின் வரலாற்றை ஆவணப்படமாக்க திட்டமிட்டிருக்கிறோம்.
- தங்களுடைய வசதியான வாழ்வை தியாகம் செய்து நம் நாட்டிற்கு வந்து கோதுமை மணிகளாய் விதைக்கப்பட்ட மிஷனெரிகள் மற்றும் தன் சொந்த மக்களுக்காக தங்களையே அர்ப்பணித்த நம் இந்திய மிஷனெரிகளின் நினைவிடங்கள் மற்றும் கல்லறைகளை கண்டறிவதுடன் திருச்சபையுடன் இணைந்து பராமரித்து அவர்களுடைய தியாகங்களை குறித்த விழிப்புணர்வை திருச்சபை மக்களுக்கு ஏற்படுத்த பணியாற்றி வருகிறோம்.
- வரலாற்றுச் சங்கம் சார்பில் மிஷனெரிகள் பயன்படுத்திய கலை பொருட்கள் மற்றும் புத்தகங்கள், பைபிள், சேகரித்து வரலாற்று **அருங்காட்சியகம்** அமைக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறோம். மிஷனெரிகள் பயன்படுத்திய பொருட்களை சேகரித்து வருகிறோம்.
- கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் மற்றும் மேய்ப்பரின் பயிலகம் சார்பாக கடந்த இரண்டு மாதமாக இணையதள **சீர்திருத்த தமிழ் திருச்சபையின் ஆரம்பங்கள்** என்ற தலைப்பில் ஒவ்வொரு மாதமும் இரண்டாவது செவ்வாய்கிழமைகளில் இரவு ஏழு முப்பது மணிக்கு நடைபெற்று வருகின்றன.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, கடந்த 2017ம் ஆண்டு அற்பமாக ஆரம்பிக்கப்பட்ட நம்முடைய திருநெல்வேலி **கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்** இது வரையிலும் பல்வேறு தடைகளையும், நெருக்கடிகளையும் கடந்து வந்திருக்கிறது. வரலாற்று ஆய்வாளர்கள், ஆசிரியர்கள், வாசகர்கள், நண்பர்கள், நலன் விரும்பிகள் ஆகியோருடைய இடைவிடா ஜெபத்தாலும், ஆதரவாலும், உதவியாலும் நம் திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. மேலும் நம்முடைய மாதாந்திர ஆய்விதழும் தடைகளின்றி வெளி வருகிறது. நம்முடைய கிறிஸ்தவ வரலாற்றுச் சங்க செயல்பாடுகள் சிறப்பாக அமைய ஜெபத்தாலும், உடலுழைப்பாலும், பொருளாதார வழியிலும் உதவி வரும் அத்துணை நல்லுள்ளங்களுக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம். தொடர்ந்து நாம் செயல்பட வேண்டிய தளங்கள் அநேகமுண்டு. இணைந்து செயல்பட அன்புடன் அழைக்கிறோம். வரலாற்றுச் சங்கத்தின் ஓர் அங்கமாக வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் கருவியாவோம். சர்வ வல்லமை கொண்ட ஆண்டவரின் ஆயுதமாவோம்.






Return Requested:

Tamil Printed Book- For Private Cirulation Only

To

**CHRISTAVA VARALATRU SUVADUGAL**
# 2.2.3(4)North Street,
Bungalow Surandai-627859.
Tenkasi District
Tamil Nadu
Ph: 04633 290401
Mo: **91767 80001**

Owned & Published By CHRISTIAN HISTORICAL SOCIETY, Tamil Eduction- For Private Cirulation Only
Editor|G.MUTHAIAH SELVAKUMAR| at 2.2.3(4)North Street, Bungalow Surandai-627859. Tenkasi District Ph: 04633 290401